REGD NO: M 1530.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்:

வாகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI | FEB. 1929 | № 2

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

*N. B:*—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

***All Rights Reserved by the Publishers.***

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| தெய்வ வணக்கம் ... ... | 57 |
| ஹிதோபதேசம் ... ... | 58, 59 |
| பெரியார் பெருமை ... ... | 60—63 |
| குருவின் வஞ்சகமும் மாணவனின் விவேகமும் ... ... | 64—70 |
| இந்துப்பெண்களுக்கோர் சொல் ... | 71—77 |
| இதமான உணவை மிதமாக உண்ணு | 78—80 |
| ஜப்பான் தேசத்துச் சிறுவர்களுக்குச் சொல்லும் கதைகள் ... | 81—83 |
| காரியசித்தியின் இரகசியம் ... | 84—87 |
| பழகி முத்துப்பாட்டு ... ... | 88 |
| அறிஞனின் சேர்க்கை ... ... | 89—93 |
| குள்ள நரியின் மந்திரம் ... ... | 94—98 |
| கவைஞவைக் கண்டு பிடித்தது யார்? | 99—101 |
| ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் லோகோபகாரியில் எழுதியது ... | 102—104 |
| பிள்ளை விளையாட்டு ... ... | 105—112 |


**குறிப்பு:**—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் யோனுல் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 11 | 1929ஆ பிப்ரவரி மாதம் | பகுதி 2

### தெய்வ வணக்கம்

கண்கொண்ட பூச்சக்ர வாளகோளத்தை யொரு
    கதிகொண் டெழுந்துசுற்றிக்
ககன கூடந் தடவி யுகசண்டமாருதக்
    காலொடு சுழன் றுபின்னி
விண்கொண்ட மேக படலத்தைச் சினந்துதன்
    மெய்யன்ப னெனவுகந்த
விடவாவின் மகுடமுடி சடசடென உதறிநடு
    மேருவொடு பாய்ந்துகொத்தித்
திண்கொண்ட வல்லசுரர் நெஞ்சுபறை கொட்டத்
    திடுக்கிட விடித்துமோதிச்
சிறைகொண் டடித்தமரர் சிறைகொண் டணைத்திலகு
    திறைகொண்ட மயில்வாகனு
தண்கொண்ட நீபமலர் மாலையணி மார்பனே
    ஸரஸகோ பாலன்மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுரு வாய்வந்த
    சரவணபவா நந்தனே. (சுப்ரமண்யதேசிகர்)

# ஹிதோபதேசம்

(1) ஒருவனாலே ஒரு குலத்திற்குக் கேடுவருமானால் அவனைத் துறக்கலாம். கொல்லவும் செய்யலாம், பாவமுமில்லை. பழியுமில்லை. ஒரு குடும்பத்தினால் ஒரு கிராமத்திற்குக் கேடுவருமானால் அக்குடும்பத்தைத் துறக்கலாம். ஒரு கிராமத்தினால் ஒரு நாட்டுக்குக் கேடுவருமானால் அந்த கிராமத்தையுந் துறக்கலாம். தருமத்திற்காக பூமி முழுவதையும் இழக்கலாம்.—இது விதுரர், கெட்ட பிள்ளையாகிய துரியோதனனை இழக்கலாம் என்பதைச் சொல்லவந்தபோது திரிதராஷ்டிரனுக்குச் சொன்ன நீதி.

(2) ஒரு ரிஷபம் தான் கொண்ட மதத்தினாலே தன் கொம்பொடிந்து போகுமென்பதை எண்ணிப்பாராமல், மலையைத் தன் கொம்பினாலே முட்டுவதுபோல்—பொருளினாலோ, அதிகாரத்தினாலோ, சந்தோஷத்தினாலோ, காமத்தினாலோ மதங்கொண்டவர்கள்—செய்வன தவிர்வன உணராமல் கேடடைவர்.

(3) சிரிக்கும்படி பேசுவர் சிறியவர்; குற்றத்தை எண்ணி வருந்தும்படி சொல்வர் அறிஞர்—ஆனால் அப்படிச் சொல்கிறவர்களும் அதைக் கவனமாய்க் கேட்பவர்களும் கிடைப்பது அருமை—இது விதுரர் துரியோதனனுக்குச் சொன்ன நீதி.

(4) உலகத்தில் மக்களுக்குப் பிதா ஐவர் (1) இன்பமாகப் பெற்றோன். (2) இடர்தனைத் தீர்த்தோன் (3) எந்தவிதத்திலாவது அன்னமிட்டுப் பாதுகாத்து வந்தோன். (4) ஓதுவித்தோன். (5) உபதேசித்தவன்.

(5) "பகவத் சிருஷ்டியில் மகாமேன்மையான பொருள் யோக்கியமான ஒரு மனிதன்"—என்றார் ஒரு புலவர்.



இதனாலேதான் 'அரிதரிது மானிடராதலரிது' என்றார் ஔவையார்.

(6) லாபமடைவதற்கு ஒரே ஒரு வழியுண்டு. அது ஸத்ய மார்க்கம். அது தவிர வேறுமார்க்கமில்லை. ஸத்யத்தின் பெருமையை ஸத்யவானே அறிவன். ஸத்யத்தைத் தெய்வமாக எண்ணுகிறவர்களுமுண்டு. ஸத்யம்பேசியதனால் ஒருவன் ஒரு கொடிய கொலைக்குற்றத்தினின்றும் தப்பியதுண்டு. சென்னையில் பத்து வருஷத்துக்கு முன், ஒரு குற்றத்துக்குள்ளாய் இரண்டரை வருஷம் சிறைவாசஞ் செய்து திரும்பி வந்த போலீஸான் ஒருவன் ஒபிட்டவேலெயிட்லா கம்பெனியில் போய் உத்தியோகங் கேட்டபோது, "நான் இரண்டரை வருஷம் சிறைவாசம் செய்து நேற்றுத்தான் திரும்பிவந்தேன். நான் எழுதப்படிக்கத் தெரிந்தவன். போலீஸ் ஸப் இனிஸ்பெக்டராய் இருந்தவன். விதிவசத்தால் தண்டனையடைந்தேன். எனக்கு உத்தியோகம் வேண்டும், நான் எந்தவேலையும் செய்வேன்" என்று மெய் சொன்னான். துரை, உடனே அறுபது ரூபாய் சம்பளமுள்ள ஓர் உத்தியோகத்தில் அவனை அமர்த்தினான். இது நேரிற் கண்டவிஷயம். ஸத்யம் இன்னும் அநந்த நன்மைகளைக் கொடுக்கும்.

(7) நெருப்பைத் தொட்டுக் கைசுடாமலிருக்கவேண்டுமென்று நினைப்பதற்கொப்பாகும் ஸத்யவழியைவிட்டு வேறு வழியில் லாபம்பெற நினைப்பது. வேலைக்காரர்களுக்குப் பொய்யைக் கற்பிக்கும் எஜமானன், பின்னால் அவர்களாலே பெரிய இடையூறடைவான். இதுபோலவே, மக்களுக்குப் பொய் பேசக் கற்றுக்கொடுக்கும் தாய்தந்தையரும் இடருறுவர்.

ஆகையினால் ஸத்தியத்தை விட்டவன் எதிலும் முன்னுக்கு வருவதற்கிடமிராது. இதனாலேதான்—"பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவு" என்றார்கள் பெரியவர்கள்.

## பெரியார் பெருமை

ஒரு காட்டில் ஒரு பெரிய ஒட்டகம் பிர்மதேவனைக் குறித்துத் தவஞ்செய்தது. அதனுடைய பக்திக்கிரங்கிய பிர்மதேவர் அன்னவாகனத்தின்மேல் வந்து அதற்குக் காட்சி தந்து, "உனக்கு வேண்டும் வரமென்ன?" என்று கேட்டார். ஒட்டகம் விவேக சூனியத்தினாலும் தாமஸகுணத்தினாலும் பிர்மதேவரைப் பார்த்து, "பிர்மதேவரே, வந்தனம்—தேவர் முதலிய யாவரும் பார்த்து ஆச்சரியப்படும்படியாய் என் கழுத்து, நூற்றைம்பது யோசனை தூரம் நீளம் வளரும்படி அநுக்கிரஹம் பண்ணவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது.

பிர்மதேவர் நகைத்து, இதன் ஆணவத்தை அடக்கவேண்டுமென்று கருதி, "நீ கேட்டபடி வரந்தந்தோம்" என்றுரைத்துச் சென்றார். அப்பால் ஒட்டகத்துக்கு அது விரும்பியபடியே கழுத்து நீண்டுவிட்டது.

பின் அது மமதையடைந்து ஒரு பிரயாணியை லட்சியஞ் செய்யாமல் கழுத்தினால் காட்டில் உலாவும் மிருகங்களெல்லாவற்றையும் பிடித்துக்கொன்று தின்று கொழுத்து மதோன்மத்தாய்த் திரிந்துகொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள் உகாந்தகாலம் போற் காற்றுமழையும் இடிமின்னலுடனே பெய்யத்



தொடங்கி யாரும் எந்தப் பிராணியும் வெளியே தலைகாட்டவிடாமல் சாடின. அவ்வேளையில், பிர்ம்மாண்டமான தேகமும் நூற்றைம்பது யோசனை தூரம் நீண்ட கழுத்துங்கொண்ட அவ்வொட்டகம் ஒதுங்கியிருக்க இடங்கிடைக்காமல் பெருந்துன்பப்பட்டுக் கடைசியில் ஒரு குன்றிலிருந்த ஒரு சிறு குகையைக்கண்டு அதில் தன் நீண்ட கழுத்தை நுழைத்துக்கொண்டு இளைப்பாறியது. அந்தக் குகைக்குள் அதற்கு முன்பே ஒரு குள்ளநரி புகுந்து ஒளிந்துகொண்டிருந்தமையால் அந்த நரி, ஒட்டகத்தின் கழுத்தைக் கண்டதும் "ஓ காட்டில் ஒரு பிராணியையும் விடாமல் வளைத்துத் தின்ற ஒட்டகத்தின் கழுத்து இது. இதை விடப்படாது. இதனை இன்று ஒழித்துவிடவேண்டும். நம்முடைய நல்ல வேளைக்காகவே ஆண்டவன் இந்த மழையைக் கொண்டுவந்துவிட்டான். 'யானைக்கும் அடி சறுக்கும்,' என்பது சரியாய்விட்டது." என்றெண்ணிச் சந்தோஷமடைந்து ஒருபக்கமாய் நகர்ந்து அவ்வொட்டகத்தின் கழுத்து நரம்பைக்கடித்து இரத்தத்தை உறிஞ்ச ஆரம்பித்தது; பின் சிறிது நேரத்தில் ஒட்டகத்தை ஒழித்துவிட்டது.

ஏன் ஒட்டகத்திற்கு இப்படிப்பட்ட மரணம் சம்பவித்தது?—அதன் பலமும் தேக ஆகிருதியும் யாதாயின?—அந்தோ! தவசுசெய்து வரம்பெற வல்லமையிருந்தும், பெரியாரைத்துணைக் கொள்ளும் பேரறிவின் பெருமையில்லாமற் போனதினால் பிரமதேவ

ரிடம் தனக்குத் தக்கதோர் நல்ல வரத்தைப் பெருமல் பேய்மதியால் தகுதியற்ற வரம்பெற்றுக் கெட்டது. இதுவன்றித் துணைவலியாவது இருந்தால் நரியினுடைய பகை நேரிடாது. அது காட்டிலுள்ள ஜீவராசிகளை யெல்லாம் பகையாக்கிக் கொண்டதல்லவா ?

ஆகையினுல் எவனும் எந்த நிலையிலிருந்தாலும் பெரியாருடைய துணையைப் பெற்று அவர்கள் கூறும் போதனையின்படி நடக்கவேண்டும். எல்லோருடனும் நேசம் பாராட்டிவரவேண்டும். துணைவலியில்லாதவன் ஆபத்திற்குள்ளாவான்; ஜயமடையமாட்டான். இத னுலேதான், ஸ்ரீராமன் திரிபுவன ஜயதரனுகிய தம்பி யிருந்தும் கவிக்குலங்களைப் படைகூட்டிக்கொண் போய் இராவணனை எதிர்த்தான்.

பெரியவர்களுடைய அதாவது அறிவிற் பெரியவ களுடைய சகாயமானது சகல சம்பத்தையுங் கூட்டி வைக்கும்; சகல ஜயத்தையும் தரும்; ஆபத்திலிருந்து காப்பாற்றும். எந்நேரமும் அவர்களுடைய தரிசனமும சாவகாசமும் பெறவேண்டும். வீண்காலம் போக்காம சத்காலக்ஷேபம் பண்ணவேண்டும். நல்ல நீதிமுறை களைத் தூண்டிக்கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் தருமம், தானம், தவம், சாந்தம் இவைகளைப்பற்றி கேட்டுத் தெளிவடைதல் வேண்டும். கூடவிருக்கு பெண்டு, பிள்ளை, மித்திரர் யாவரும் நாம் கடைத்தே றும் மார்க்கத்தைப் போதிக்கமாட்டார்கள். தின்



தின்று நம்மை ஒழிப்பார்கள்; நமக்கொரு ஆபத்து வந்தால் நம்முடனிருந்தழுவார்கள்; அல்லது நம்மைவிட்டு விலகிவிடுவார்கள். நீர் நிறைந்த குளத்திற் சேர்ந்திருக்கும் பறவைகள் நீர் வறண்டதும் வேறிடத்திற்குப் போய்விடும். அதிலிருக்கும் தாமரை முதலியனவோ நீருடனிருந்து அது சுரக்கும்போது கூடவே முளைக்கும். அதுபோல் பெரியாரைத் துணைபற்றியிருந்தால் நல்ல கேள்விகளினுலும் சாஸ்திரப் பயிற்சியினுலும் நம்மைக் கடைத்தேறும்படிசெய்வார்கள். ஆகையினுல் இந்தப் பூமண்டலத்தில் பெரியவர்களுக்கு மிஞ்சின ஒரு பொருளில்லை. உலகமென்பது உயர்ந்தோர் மயமாய் இருக்கிறது. ஈசுவரன் விளையாடுகிற இந்த ஜகமானது பெரியவர்களுக்காகவே யல்லது மற்றவர்களுக்கல்ல. அவர்களின் பொருட்டு ஜகதீசன் செய்யும் நன்மைகளெல்லாம், நெல்லுக்கு இறைக்கும் தண்ணீர் புல்லுக்கும் புசிப்பாகுமாறுபோற் மற்ற ஜீவராசிளுக்கும் உபயோகமாகின்றன. அதனுலேதான் ஒளவைப் பிராட்டியார் "பெரியாரைத் துணைகொள்" என்று போதித்தார்.

---

பிதாவின் ருணத்தைத் தீர்ப்பவன் புத்திரன் (இதனைத் தேசபந்துதாசர் சரித்திரம் நன்கு விளக்கும்) பிதாவுக்கு இதமான புத்திரன் சகல மங்களகாரியத்துக்கும் உரியவன்; இதமாக நடக்காத புத்திரன் யாதொரு கர்மத்துக்கும் அருகனல்லன.

# குருவின் வஞ்சகமும் மாணவனின் விவேகமும்

கனகபுரி என்கிற பட்டணத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனை அவன் பகையரசனொருவன் வென்று கனகபுரியைப் பிடித்துக்கொண்டான். பின்பு கனகபுரி அரசன் தன் மனைவியுடனும் தன் புத்திரரிருவருடனும் அந்நகரைவிட்டுப் புறப்பட்டுப் பெருந்துயரத்துடன் மனம்போனபடி நடந்து சென்று ஒருநாள் காசி பட்டணத்தை யடைந்தான்.

அரசன் இத்தனை கஷ்டநிலையை யடைந்தானாயினும் தன் புத்திரர்களைப் படிப்பிக்க வெண்டுமென்கிற எண்ணம் அவனுக்குண்டாயது. கல்விச் செல்வம் பெற்றால் பொருட் செல்வத்தையும் பெருமையையும் அடைதல் கூடுமென்பது அவன் எண்ணம். உள்ளபடியே கல்விச்செல்வம் அடைந்தவங்கள் எந்தக் காலத்திலாவது பிழைப்புக்கு வழி தேடிக்கொள்வதை நாம் பார்க்கிறோமல்லவா? இதனாலேதான் "கல்விச் செல்வமே எல்லாச் செல்வ நல்குமே" என்றும் "கல்வியே கண்கள்" என்றும் பழமொழிகள் வழங்குகின்றன.

அரசன் கல்விச் செல்வத்தின் பெருமை அறிந்தவனாதலால், அந்நகரத்தில் நெடுகலுந்தேடி ஓர் ஆசிரியனைக் கண்டு அவனிடம் தான் பரமஏழை யென்றும் தன் மக்களிருவரையும் படிப்பிக்கவேண்டுமென்று ஆசையிருக்கிறபடியால எப்படியாவது அவர்களுக்குக்



கல்வி போதித்து என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அந்த குரு, நான் உம்முடைய மக்களிருவருக்கும் படிப்பு சொல்லி வைக்கிறேன். நீர் ஏழையானபடியால் உம்மிடம் நான் திரவியத்தை எதிர்பார்க்கமுடியாது. ஆகையினால், குருதக்ஷிணையாக உம்முடைய பையன்களிருவரில் எனக்கு ஒருவனைக் கொடுத்துவிடவேண்டும்" என்றான்.

அரசன், எப்படியாவது மக்கள் கல்வியிற் பெரியவனானால் போதுமென்று எண்ணித் தன் மக்களில் ஒருவனைக் குருவுக்குக் கொடுப்பதாக வாக்களித்து இருவரையும் அந்தக் குருவினிடம் ஒப்புவித்துத் தன் மனைவியுடன் தன் பிழைப்பைத்தேடிக்கொண்டு சென்றான்.

மக்களிருவரும் குருவினிடம் அடக்கமாயிருந்து வந்தார்கள். அவர்களில் பெரியவன் பெயர் மாதவன், சின்னவன் பெயர் சிவராமன். குரு நல்ல குணமுடையவனல்லன். படித்திருக்கிறான் சகலகலைகளையும். ஆகையினால் அவன் சிவராமனைப் பின்னால் தானடையக் கருதி அவனுக்குத் தினந்தோறும் கருத்துடன் கல்வி போதித்துவந்தான். மாதவனைத் தன் வீட்டுப் பணிவிடை செய்யவும் தன் பணிவிடை செய்யவும் வேலைக்காரனைப்போல் வைத்துக்கொண்டான்.

சிவராமன் சிறந்த புத்திசாலியானதால், ஓயாமல் படித்துக் குரு உபதேசிப்பவைகளை யெல்லாம் மறவாமல் மனத்திற்கொண்டு சிலவருஷங்களில், அஸ்திர

சஸ்திர வித்தைகளிலும் மல்யுத்தப் பயிற்சியிலும் சாஸ்திரங்களிலும் பரகாயப் பிரவேசம் முதலியவைகளிலும் தேர்ச்சியடைந்து தன் குருவையன்றி ஏனையரும் வியப்புறும்படியான ஒரு சிறந்த கல்விமானாக விளங்கினான். அப்பொழுது ஒரு நாள் அவன் தனித்திருக்கையில், நமக்கு இவ்வளவு தூரம் கல்விபோதித்து வரும் நமது குரு நம்முடைய அண்ணனை முட்டாளாக்கி வைத்திருப்பதற்குக் காரணம் உணர்ந்தேன். இவர் என்னைத் தாமடையத் தீர்மானித்திருக்கிறார். இது நல்ல எண்ணமல்ல. ஆகையினால் எப்படியாவது நாம் நமது தாய் தந்தையரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு இந்த மர்மத்தைச் சொல்லிக்கொடுத்து, அவர்கள் இவரிடம் என்னை அடையும்படியான வழியைத் தேடவேண்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டு ஒரு பறவையினுருவங்கொண்டு நெடுகலும் பறந்துதேடித் தன் தாய் தந்தையரிருப்பிடத்தை யறிந்து அவர்கள் முன் தன் சுயரூபத்துடன் நின்று பணிந்து, தன் குருவின் மோச எண்ணத்தைத் தெரிவித்து, “அருமைப் பிதாவே, எப்படியாவது நீங்கள் என்னை யடையும்படியான வழியைத் தேடுங்கள்! பிறகு நான் அண்ணனை யடைய வழிதேடிக் கொள்ளுகின்றேன்!'' என்று கூறி உடனே பறவையினுருவங்கொண்டு பறந்து வந்து தன் ஆசிரியனிருப்பிடத்தை யடைந்து தன் உருவங்கொண்டு எப்போதும்போலிருந்தான்.

பின் சில நாட்களுக்கப்பால், அரசனும் அவன் மனைவியும் குருவைக்காண விருப்பங்கொண்டு தங்கள்



வருகையை முன்னாலேயே தெரிவித்தார்கள். குரு அசாத்தியனாகையினால் மாதவனுக்கு நல்ல உடை தந்து உடுத்துக்கொள்ளச் சொல்லிப் பள்ளிக்கூடத்து அழைத்துப்போய் அங்கே சட்டாம் பிள்ளையாய் ஏற்படுத்தினான். சிவராமனைப் படிப்பில் மந்தர்களான மூடர்களுடன் சேர்த்து உட்காரவைத்திருந்தான். இச்சமயம் அரசன் தன் மனைவியுடன் குருவினிடம் வந்து அவனைப் பணிந்து, “ஐயா, பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்? கொஞ்சமேனும் கல்வியில் தேர்ச்சி பெற்றார்களா?'' என்று வினவினான். குரு, “சிவராமன் பரமமுட்டாள். அவனுக்குச் சொல்லி வைத்தவைகளெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போலாயின. பெரியவன் சமர்த்தன்; சதுரன்; ஏகசந்தக்ராகியானதால், நான் சொல்லிவைத்ததை உடனுக்குடன் பிடித்துக்கொண்டு இப்பொழுது சகல சாஸ்திரங்களிலும் அஸ்திர சஸ்திர வித்தைகளிலும் வல்லவனாக விளங்குகிறான். அதனாலேதான் அவன் சட்டாம்பிள்ளையாக விருக்கிறான். அதோ பாரும் சிவராமனை அவன் அந்த மூலையில் மூடருடனிருக்கின்றான். என்ன செய்யலாம் மூளையில்லா முண்டம்; இப்போது கூடக் கைசலிக்க அடித்தேன். அடித்து என்ன செய்கிறது? படிப்பு வரவில்லை. அந்தப் பாக்கியம் கிடையாது அவனுக்கு. இவர்களில் நீர் யாரை விரும்புகிறீரோ அவனை அழைத்துக்கொண்டு, பேச்சுப்படி ஒருவனை எனக்குக் கொடும்'' என்றான்.

அரசன் அது கேட்டு மனத்திற்குள் சிவராமன் சொன்னதை நினைத்துக்கொண்டு, “ஐயா, தாம் வித்தை

கற்றுக் கொடுக்கப் பெருஞ் சிரமம் எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட தமக்கு முட்டாளையா தக்ஷிணையாகக் கொடுத்துச் செல்வது? அதில் எனக்கு விருப்பமில்லை யாகையினால் முட்டாளை நான்வைத்துக் கொள்ளுகிறேன். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். நீங்கள் மகா மேதாவியாகிய மாதவனை வைத்துக் கொள்ளுங்கள். எங்கிருந்தாலும் என் குழந்தை தானே. மாதவனாலே என் குடி விளங்கட்டும். தங்களுடைய பெயரையும் அவன் நிலைநிறுத்தட்டும்” என்று கூறிப் பின்னும் அந்தக் குருவைப் பார்த்து, “ஐயா, என் மனைவிக்குச் சின்னப் பிள்ளையாகிய சிவராமனிடம் அதிக அன்பு. ஆதலால் அவனையே நாங்கள் வைத்துக்கொள்ள விரும்புகிறோம்” என்றான்.

குரு, அரசனை மறுத்துப் பேச வழியில்லாமை கண்டு, ‘உப்புக் கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப் போல்’ சற்று நேரம் விழித்துக்கொண்டிருந்து அப்பால், “அவனை இவர்கள் கொண்டுபோகட்டும். எப்படியாவது நான் இந்தச் சிவராமனை அடையாமலிருப்பதில்லை. இன்றேல் இவனுடைய கல்வித்திமிரை அடக்கப் பார்க்கிறேன். இவனாலேயே நம்முடைய இரகஸ்யமான கருத்து இவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்” என்று எண்ணி, “ஐய, உங்களிஷ்டப்படியே சிவராமனை அழைத்துக்கொண்டு போங்கள். மாதவன் என்னிடம் இருக்கட்டும்” என்று கூறிச் சிவராமனை அரசனுடன் அனுப்பிவிட்டான். அவர்கள் போன பின்பு, குரு



மாதவனுக்குக் கல்வி போதிக்க ஆரம்பித்தான். கரக்கிற மாடைக் கள்ளன் கொண்டுபோனால் வறட்டுமாடு மகாலட்சுமி யாகுமல்லவா?—

அரசன் தன் மனைவியுடனும் மகன் சிவராமனுடனும் அந்நகரத்தைவிட்டுப் புறப்பட்டு வேறொரு நகரம் போய் உஞ்சவிருத்தியெடுத்துக் காலங்கழித்து வந்தான். சிவராமனுக்குத் தன் தாய்தந்தையர்களை அந்த ஓர் ஈனநிலையில் பார்க்க விருப்பமில்லை. அதனால் அவன் தந்தையை நோக்கி, “பிதா, நான் ஓர் அழகிய சேவலாக உருவங்கொள்கிறேன். என்னை நீங்கள் இவ்வூர் அரசனுக்கு விற்கக்கொண்டுபோய் விலை நூறு வராகன் என்று சொல்லுங்கள். அரசன் என்னை அந்த விலைகொடுத்து வாங்கிக்கொள்வான். பின் நீங்கள் பக்கத்து நகரமாகிய உச்சயினியிலே போயிருங்கள். நான் எப்படியாவது உங்களிடம் வந்துசேருகிறேன். ஆலோசனை செய்யாதேயுங்கள். கவலைப்படாதேயுங்கள்” என்று கூறி உடனே சேவலுருவங்கொண்டான். அந்தச் சேவல், குமாரக்கடவுளின் திருக்கரத்துக் கொடியிலே விளங்கும் சேவலைப்போல் விளங்கியது. ஆயிரம் பொன் விலை சொன்னாலும் தரும் என்று நினைக்கும்படியான அழகும் ஆகிருதியுங் கூடியதாயிருந்தது. அரசன் அதைக் கண்டு மகிழ்ந்து, சிவராமன் கூறியபடி அவ்வூர் அரசன் அரண்மனைக்குக் கொண்டுபோய் விலை கூறினான். அரசன் அச்சேவலுக்காக நூறு வராகன் கொடுத்து வாங்கிக்கொண்டான். பின், இந்த அரசன் தன் மனைவியிடம் வந்து விஷயத்தைச் சொல்லி அவளையும் அழைத்துக்கொண்டு உச்சயினி நகரம்போய்

அங்கே ஒரு வீட்டில் குடியிருந்துகொண்டு சுகமாயிருந்துவந்தான். ஆனால் மகனை என்று காண்போம் என்கிற கவலை அவர்களிருவரையும் பாதித்துக்கொண்டிருந்தது.

பின் ஒரு வாரத்திற்கெல்லாம் சேவலாயிருந்த சிவராமன் தன்னை வைத்து மூடியிருந்த குடாப்பின் கீழ் இரவில் யாவரும் நித்திரை செய்தபின் பெருச்சாளிரூபங்கொண்டு குடைந்து நீண்ட துவாரஞ்செய்து அதன் வழியே வெளிப்பட்டுத் தன் சுயரூபத்தை ஏற்று உச்சயினி வந்து தாய் தந்தையரைப் பணிந்து அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்று மகிழ்ந்தான். பின் கொஞ்ச நாட்களில் அந்த நூறு வராகனும் செலவாய் விட்டபடியால், சிவராமன் தந்தையைப் பார்த்து, "பிதா, நானொரு பாராசாரிக் குதிரையாக மாறுகிறேன். என்னை இந்நகர அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தி ஆயிரம் வராகன் விலை கூறும். அரசன் கொடுத்து வாங்கிக்கொள்வான். அதை வைத்துக்கொண்டு காலங் கழித்து வாருங்கள். நான் எப்படியாவது வெகு சீக்கிரத்தில் தங்களை வந்தடைகிறேன்" என்று கூறி, உடனே ஒரு குதிரையாக மாறினான். அந்தக் குதிரை தெய்வலோகத்துக் குதிரைபோலிருந்தது. அதைக் கண்டு தந்தை மகிழ்ந்து, அதை ஓட்டிக்கொண்டு அரசனிடம்போய் விற்று ஆயிரம் வராகனை அடைந்து சுகமாகக் காலங்கழித்து வந்தான். ஆயினும் தாய் தந்தையர் இருவருக்கும் மைந்தனை என்று காண்போம் என்கிற ஏக்கமே மிகுதியாயிருந்தது. (வரும்)

---

# இந்துப்பெண்களுக்கொரு சொல்

[E. சுப்ரமண்யம் எழுதியது.]

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்று திருவள்ளுவனார் சொல்லியிருத்தலால் உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களையுந் தழுவி மனதைக் கெட்டவழியிற் செல்லவிடாது கற்புநிலையில் நிறுத்தல்வேண்டும்.

"இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை"
இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

என்று பெரியார் கூறியிருப்பதனால் ஒருவனுடைய மனைவியிடத்தில் நற்குண நற்செய்கைகள் உண்டாயிருந்தால் அவன் வீட்டில் ஒன்றுமில்லாதிருப்பினும் அவ்வீடு எல்லாம் உள்ளதுவேயாம்; அவளிடத்தில் அந்நற்குணங்கள் இல்லையாயின், அவ்விடம் எல்லாமிருப்பினும் ஒன்றும் இல்லா ததுபோலாம். கற்புடைய மனைவியில்லாத வீடானது தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், அரசனில்லாத நாடும், தலைவனில்லாத சேனையும், நற்சிந்தையில்லாத மனமும், கிருபையில்லாத கண்ணும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத மலரும்போல் சிறப்பின்றி இடுகாட்டுக்கொப்பாகும்.

கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம் மகிழும்படி ஒருத்தி விவேகமும், கற்பும், இரக்கமும் மற்றுமுள்ள நற்குணங்களு முடையவளா யிருக்கவேண்டுமே யல்லாமல் விலையுயர்ந்த வஸ்திரம், ஆபரணம் முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு தண்டுமாரியாய் மினுக்கித்திரிதல் கூடாது; இப்படியிருப்பது 'விலைமகட்கு அழகு தன்மேனி மினுக்குதல்,' என்று சொல்லியபடி இல்லறத்தில் வாழும் குலமகட்குச் சரியானதல்ல.

தெய்வச் செயலால் தனக்கு வாய்த்த புருஷன் மிக்க குரூபியாயிருந்தாலும் அவனை மன்மதனாகவும், நிரக்ஷர குக்ஷியாயிருந்தாலும் கல்விக் களஞ்சியமாகவும், அன்னவஸ்திரத்துக்குக் கதியில்லாத அஷ்ட தரித்திரனாகவிருந்தாலும் அவனைக் குபேரனாகவும் எண்ணி, அவனை அவமதியாமல் அவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து அவனைத் தன்னால் இயன்றமட்டும் சீர்திருத்த முயலவேண்டும்.

மனைவியானவள் தன் கணவனுக்குத் தாதியைப்போல் பணிவிடை செய்பவளும், மந்திரிபோல் சமயோசிதமறிந்து நல்லயோசனை சொல்பவளும், பூமாதேவிபோல் சலியாத பொறுமை யுடையவளும் வேசிபோல் பர்த்தாவைப் பிரியப்படுத்துகின்றவளுமா யிருக்கவேண்டும்.

புருஷன் ஒருவேளை கோபித்தால் தானும் கோபித்துக்கொள்ளாமலும், அவன் வைதால் தானும் வையாமலும் அவன் ஏதாவது ஒரு காரியம் செய்யச் சொன்னால் அதற்கு மாறுதலான மற்றொருகாரியத்தைச் செய்திடாமலும் இருக்கவேண்டும்.



சோழநாட்டில் ஒரு வேளாளன் ஒரு நாள் தன் பெண்சாதியுடனே இன்றைக்குப் பெரியவர் ஒருவருக்கு அமுது படைக்கவேண்டும் என்று சொல்ல அவள் "இதென்ன சங்கடமாயிருக்கிறது! நல்ல வேடிக்கைதான்! 'தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சையெடுக்கிறாள், தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறான்' என்பதுபோல இருக்கிறதே. அஞ்சு மூன்றும் அடுக்காயிருந்தால் அல்லவோ அறியாத பெண்ணும் கறியாக்குவாள்? அரிசி வேண்டும் மற்றப் பதார்த்தம் வேண்டும், இதற்கெல்லாம், நான் எங்கே போகிறது" என்று சொல்ல, அவன் எங்கேயோபோய் வேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்துக்கொண்டு வந்து, அவளைப் பார்த்துச் சீக்கிரத்தில் சமை என்று சொன்னான். உடனே அவள் "நீ போ! உனக்கு என்ன வேலை! எனக்குத் தலைவலி பிராணன்போகிறது?" என்று சொல்லிக்கொண்டு பாயைவிரித்து நெடுமுக்காட்டுப் படுத்து விட்டாளாம்.

சிலபெண்கள், புருஷன் கோபிக்கத் தங்கள் கோபத்தை அவனிடம் வெளியிடச் சரிப்படாவிடின் தங்கள் வீட்டில் இருக்கும் பாத்திரங்களை யுடைப்பதும் தங்கள் குழந்தைகளையடிப்பதும் மற்றும் இப்படிப் பட்ட துர் நடத்தைகளால் தங்கள் கோபத்தை நிவர்

த்தி செய்து கொள்ளுகிறார்கள். இத்தகைய செயல்கள் கற்புடைமாதர்க்குச் சிறிதும் சிறப்பல்ல.

மாமனார், மாமியார், மைத்துனர், நாத்திமார் முதலியவர்கள், இப்படிப்பட்ட பெண் நமக்கு வாய்த்தது நமது பெரியோர்கள் செய்த பாக்கியந்தான் என்று சொல்லி மனமகிழும்படி நடந்துகொள்ள வேண்டும்.

புருஷனுக்குப் பொருள்வரவின்றி அவன் வறுமையால் துன்பப்படுங் காலத்தில் "ஏறுழுகிறவன் என்னசெய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்று நினைக்கவேண்டுமே யல்லாமல் அவன் மனம சலிக்கும்படி அவனை எந்நேரமும் வருத்தப் படுத்தலாகாது. தான் மிக்க செல்வவான் வீட்டிற் பிறந்திருந்தாலும் வறியவனுக்கு வாழ்க்கைப்பட்டால் அவனைத் தன் செல்வச் செருக்கினால் அசட்டை பண்ணாமல் "மலையிலே விளைந்ததானாலும் உரலிலே வந்துதானே மசிய வேண்டும்" என்பதை நினைத்து அவனுக்கு அடங்கி நடக்கவேண்டும்.

மாமியார், மாமனார் முதலானவர்கள், "தெரியாமல் இப்பெண்ணைக் கொண்டோமே பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டதே," என்று விசனப்படும்படி நடந்துகொள்வதாகாது.

தன் கணவன் சம்பாதிக்கும் பொருளுக்குத் தக்கபடி ஒருத்தி தன் வீட்டில் செலவுசெய்ய வேண்டுமே யல்லாமல் கணவனுக்குத் தெரியாமல் தான் கண்டபடி



வேண்டியவர்களுக்கு வாரிக்கொடுப்பதினால் "ஏது இவள் தன்னை மணந்தவன் தலையில் சீக்கிரம் ஓட்டைக் கவிழ்த்து விடுவாள்போல் தோன்றுகிறது" என்று சொல்லுவதான கெட்ட பெயர் வாங்குவது மிகவும் அருவருக்கத் தக்கது. இதனால் பிறருக்கு ஒன்றுமே கொடுக்கக்கூடாது என்பது தாத்பரியமல்ல. தமக்கு இயன்ற அளவு பிறருக்கு உதவவேண்டியது நல்லவர்களின் கடமை. தம்முடைய பொருளுக்குத் தக்கவாறு 'தேகி' என்று வந்தவர்களுக்கு 'நாஸ்தி' என்று சொல்லாமல் பிச்சையிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தி அனுப்பவேண்டும். அப்படி யில்லாமல் பிச்சைக்கு வந்தவர்களைக் கண்டபடி வைது சும்மா அனுப்புவது மிகக் கொடுமையான காரியம்! 'இல்லையென்னுமிடம் பல்லியுஞ் சேராது' என்று பெரியோர் சொல்லுகிறார்களே.

"தந்தையாயினும் விழைவயில் தன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்தராயினு மிகவும் வனப்புடைய ரெனிலவர் மேன் மடநல்லார் தம் சிந்தை நடந்திடும்" என்று சொல்லியிருப்பதினால் ஒருத்தி, பிதாவானாலும், சகோதரர்களானாலும், பெற்ற பிள்ளையானாலும் மற்றும் எவரானாலும் அவர்கள் இருக்குமிடத்தில் தனியாய் இருக்கலாகாது. மூன்று வயது புருஷனைக் கண்டால் முப்பது வயது பெண்பிள்ளையும் எழுந்திருக்க வேண்டு மென்கிறார்களல்லவா?

நடக்கும்போது தன் முந்தானை சமீபத்தில் நிற்கிறவர்களின் மேற்படும்படி வீசிக்கொண்டு மதயானை

போல் நடக்காமல் அன்னபட்சிபோல் நிலத்தைப் பார்த்தவண்ணம் தலைகுனிந்து நடத்தல் வேண்டும்.

கணவன் யாரோடாவது பேசிக்கொண்டிருந்தால் தானும் அங்கேபோய் நின்றுகொண்டு அவன் தான் நிற்பதைக் கவனிக்காவிட்டாலும் "உங்களைத்தானே, அதென்ன சங்கதி எனக்குச் சொல்லப்படாதாக்கும்"; என்று புத்தியில்லாமல் கேட்கவாவது, அல்லது கதவு மறைவில் நின்று ஒற்றுக் கேட்கவாவது கூடாது.

நல்ல இல்லறத்தை நடத்தவேண்டுமென்கிற விருப்பமுடையவர்கள் திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகி என்னும் மாதுசிரோமணியை உதாரணமாய்க் கொண்டு நடத்தல் நலம்.

ஒருநாள் வாசுகி தன்கணவன் சாப்பிடுவதற்காக இலைபோட்டு நீரில் போட்ட அன்னத்தை வைத்த பொழுது திருவள்ளுவர் "இந்த அன்னம் மிகச் சுடுகிறது. விசிறியைக் கொண்டுவந்து சற்று விசிறு" என்றார். உடனே அந்தம்மாள் விசிறியைக் கொண்டுவர அப்பொழுது அவ்வன்னத்தில் இருந்து புகை கிளம்புவதைக் கண்டு அதை விசிறி அவ்வன்னத்தை ஆரச் செய்தாள். கற்பினின்றும் சிறிதும் வழுவாத அம்மாது தன் கணவன் சொல்வது மெய்தானென்று நினைத்து உடனே விசிறியைக் கொண்டுவந்ததினாலல்லவா நீரிலே போட்டுவைத்திருந்த அன்னமும் சுடு அன்னமாய் அதில் இருந்து புகைகிளம்பியது! இக்காலத்திலோவென்றால் ஒரு புருஷன் குளிர்ந்த சோற்றில் இருந்து புகைகிளம்புகிறது என்று சொன்னால் உடனே மனைவி உமக்கு சித்தஸ்வாதீனமில்லையா என்ன கொஞ்சநேரத்துக்கு முன் சரியாய் இருந்தீரே, நீரில் போட்ட அன்னத்தை வைத்திருக்கிறேன் சுடுகிறது என்கிறீரே என்று உரக்கச் சொல்லிக் கொண்டு உடனே அண்டைவீட்டுக்குப் போய்த் தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துப்போய்விட்டது என்று முறையிடுவாள்.



கற்பினின்றும் சிறிதும் வழுவாதவர்கள் குளிர்ந்த அன்னத்திலிருந்து புகை கிளம்பச் செய்வது ஓர் ஆச்சரியமா! பூர்வகாலத்தில் சந்திரமதி காட்டுத் தீயைக் குளிரச் செய்யவில்லையா? தமயந்தி தன்னையிச்சித்த வனை யெரித்தாள். சாவித்திரி தன் நாயகன் உயிரை யமன் கொண்டுபோகிற தருணத்தில் அவனுடன் வாதாடி மீட்டாள். இப்படியெல்லாம் இருப்பதினாலல்லவோ "பெற்றார் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப், புத்தேளிர் வாழுமுலகு" என்றபடி இம்மையில் கணவனைப் பூசித்த பெண்கள் மறுமையில் தேவர்களால் பூசிக்கப்பெற்றுப் பெருஞ்சிறப்படைகிறார்கள். ஆதலால் பெண்களுக்குக் கொண்டானிற் கேளிர் பிறரில்லை. "மாதர்மனோரஞ்சனி"

தலைமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்.

---

# இதமான உணவை மிதமாக உண்ணு

சாமிநாதனும்— அவன் தோழன் சங்கரனும் ஒரு வீட்டிற்கு விருந்துண்ணப் போனார்கள். போகும்போது சாமிநாதன் தாயார் சாமிநாதனை அழைத்து, "அப்பா, நீ சாப்பாட்டில் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. அது எது கேள்—நீ உனக்குப் பரிமாறும் வகைகளில்—இதமான உணவை மிதமாக உண்டு—கொஞ்சம் பசியாயிருக்கும்போதே எழுந்துவிடு. வயிறு முண்ட முண்ட சாப்பிடாதே. சாப்பிட்டால் கஷ்டப்படுவாய். சாப்பிட்டுக் கஷ்டப்படுவதைவிடப் பசியோடிருத்தல் நல்லது. பசிக்காகக் கொஞ்சம் உணவுண்டால் அது நீங்கிவிடும். ஆனால் அதிக உணவினால் நேரும் துன்பத்தை நீக்கிக்கொள்ளப் பெரிய வைத்தியர்களைக் கொண்டுவரவேண்டும். கொண்டுவந்து மருந்து கொடுக்கப்பட்டாலும் உடனே குணமுண்டாகுமென்பதில்லை. கவனி—போய் வா—" என்று புத்திமதிகள் கூறி அனுப்பினாள்.

சாமிநாதன் தாய்சொல் தவறாதவன்; தாயின் சொல்லை ஆயிரமாகவும் தந்தை சொல்லை மந்திரமாகவும் கொள்பவன். ஆதலால் அவன் விருந்துண்டபோது வெகு ஜாக்கிரதையாகச் சாப்பிட்டுக் கொஞ்சம் உணவு வேண்டுமென்கிற உணர்ச்சி யிருக்கும்போதே எழுந்துவிட்டான்.



சங்கரன் காய்ந்தமாடு கம்பங்கொல்லையில் புகுந்ததுபோல்—தனக்குப் போட்ட வடை, போளி, அப்பளம், பச்சி, பழம், லாடு எல்லாவற்றையும் வயிறு புடைக்கத்தின்று பெரு ஏப்பம்விட்டுக்கொண்டெழுந்தான்; சாமிநாதனைப் பார்த்து, "ஏனடா இவ்வளவு வயதாச்சு, சாப்பிடத்தெரியவில்லையே!" என்று பரிகாசஞ் செய்தான்.

சாமிநாதன்.—"இதமான உணவை மிதமாக உண்ணு" என்று என் தாயார் சொன்னாள். அதன்படி நடந்தேன்—என்றான்.

சங்கரன்.—ஓ அப்படியே! சாப்பிடுவதற்குக்கூடத் தாயார் போதனையா — கட்டுத்திட்டமா — என்று கேலிசெய்தான்.

பின் இருவரும் வீட்டிற்குத் திரும்பினார்கள். வழியில் சங்கரன் நடக்காமல் உட்கார்ந்துகொண்டான்; வயிற்றில் அள்ளைப் புறத்தில் வலிக்கிறதென்றான். சாமிநாதன் அதுகேட்டு நகைத்தான். சங்கரன், "போடா, உனக்கு வந்தால் தெரியும்!" என்றான். சாமிநாதன், "எனக்கேன் வருகிறது? நான்தான் வடை தின்னேனோ வயிறு புடைக்க?" என்று சொல்லி, "இதோ இப்போது ஓடுவேன்! இப்போது குதிப்பேன்! கோணாம் போடுவேன்! கிண்ணாரங் கொட்டுவேன்! எனக்கு ஒரு கஷ்டமும் வராது" என்று கூறி 'வா எழுந்து மெதுவாய்—' போகலாம் வீட்டுக்கு என்று அவனைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனான்.

கொஞ்சதூரம் போனதும் சங்கரன், "இருடா சாமிநாதா—கால்வாய்க்குப்போய் வருகிறேன்" என்று

கூறி ஒரு பக்கம் போனான். இச்சமயம் சாமிநாதன், தன் தாயாரை நினைத்து "அம்மா, இனிமேல், உன் போதனையை என்றும் மறவேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தாயாரை வணங்கினான்; மகிழ்ந்தான். அது ஒரு மாந்தோப்பாதலால் கீழே ஒரு சிறு மாம்பழம் கிடைத்தது. அதைச் சாமிநாதன் இன்பமாய்ப் புசித்தான்; "அந்தோ! அப்பொழுது வயிறு புடைக்க உண்டிருந்தால் இப்போதிந்தக் கனியை உண்பதெப்படி" என நினைத்தான்.

இதற்குள் சங்கரன் வந்து சேர்ந்தான்; "சாமிநாதா, தண்ணீர் எங்கேயடா இருக்கிறது?" என்று கேட்டான். சாமிநாதன், "தண்ணீருக்கு இங்கேது மார்க்கம்? வீட்டுக்குப் போனால்தான்" எனச் சங்கரன் முகம் சுருங்கியது. சாமிநாதன், சிரித்து "வா வடை தின்ன ருசியை நினைத்துக்கொண்டு" என்று கேலி செய்தான். சங்கரனுக்குக் கோபம் மூக்குக்குமேல்வந்துவிட்டது. சாமிநாதனை அறையப்போனான். அவன் விலகி ஓடி நின்று, "வடையை நினைக்கவேண்டாம். லட்டை நினைத்துக்கொள்ளேன்" என்றான். சங்கரன் ஓடி அவனைப் பிடிக்கப்போனான். சாமிநாதன் காற்றாய்ப் பறந்துவிட்டான். சங்கரன், ஓடமாட்டாமல், வாயில் வந்தபடியெல்லாம் வைதுகொண்டு உட்கார்ந்து விட்டான்.

இப்பொழுது பெருமழையும் காற்றும் வந்துவிட்டன. நானென்ன செய்வேன். 'சங்கரா—சர்ககரைப் பொங்கலை நினைத்துக்கொள்'—என்று கூறிவிட்டு ஓடி வந்துவிட்டேன்.

பாலவிநோதினி.

## ஜப்பான் தேசத்துச் சிறுவர்களுக்குச் சொல்லும் கதைகள்

ஒரு வேலைக்காரன் ஒரு நாள் ஒரு எத்தனைச் சந்தித்தான். அந்த எத்தன் வேலைக்காரனைப் பார்த்து "என்னிடம் ஒரு மந்திரக்கல்லிருக்கின்றது, நீ அதை வாங்கிக்கொள்ள விரும்புகிறாயா? நீ எதை விரும்பினாலும் அது உடனே உனக்கந்தப் பொருளைத் தரும்" என்று சொன்னான். வேலைக்காரன் "நான் விரும்புவதையெல்லாம் அது தருமென்று எனக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டான். அந்த எத்தன் "என்ன நீ இப்படிப் பேசுகிறாயே. நேற்று நான் இது போன்ற ஒரு கல்லை நம் தேசத்து அரசனுக்கு விற்றேன். அவன் அதை வைத்துக்கொண்டு தனக்கு உண்ணப் பலவிதமான பழங்கள் வேண்டுமென்று நினைத்தான். உடனே அவன் முன்பாகப் பலவிதமான பழங்களெல்லாம் வந்து தோன்றின. இது மட்டுமா! நான் இந்த நாட்டிலே இதுபோன்ற கற்கள் எத்தனையோ விற்றிருக்கின்றேன். பக்கத்துத் தெருவிலே ஒரு வர்த்தகனுக்கு இப்பொழுதுதான் ஒரு கல் விற்றேன். இந்தக் கல்லினுடைய மகிமையை யாரால் சொல்லமுடியும்" என்றெல்லாம் வெகு விமரிசையாகவும் எவரும்

இவையெல்லாம் கேட்ட வேலைக்காரன் தனக்குள்ளே "நம்முடைய யஜமானன் கடையில் சென்று சாமான் வாங்குவதற்குக் கொடுத்த பணமிருக்கின்றது. நாம் அந்தப் பணத்தைக் கொடுத்து இதை வாங்குவோம். பிறகு யஜமானனிடம் இந்த மந்திரக்கல்லைக் கொண்டுபோய் அவன் விரும்பின பொருள்களை யெல்லாம் வருவித்து அவனை மகிழச்செய்வோம். அப்பொழுது அவன் மிகவும் சந்தோஷித்து என் குற்றத்தை மன்னிப்பதோடு என்னிடமிருந்த கல்லைப் பெரும் விலைக்கு வாங்கிக்கொள்வான்" என்று மனக்கோட்டை கட்டினான். பிறகு தான்கொண்டுவந்த பணத்தை எத்தனிடம் கொடுத்து அந்தக் கல்லை விலைக்கு வாங்கிக்கொண்டு வீட்டிற்குப் போனான். வேலைக்காரன் வந்தவுடனே யஜமானன் "என்னடா சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்தாயா?" என்று கேட்டான். அதற்கு வேலைக்காரன் "ஐயா! நான் ஒரு மந்திரக்கல் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். அது இருக்குமட்டும் இனி கடைக்குப்போய் எப்பொருளையும் கொள்ளவேண்டியதில்லை. நீங்கள் எது வேண்டுமானாலும் கேளுங்கள் உடனே வரவழைத்துத் தருகின்றேன்" என்றான்.

எஜமானனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் கோபத்தோடு "என்ன வேண்டுமானாலும் வருவித்துத் தருகிறாயா? அங்ஙனமாயின் "இப்பொழுதே எனக்கு ஒரு குதிரை வேண்டும்" என்றான். வேலைக்காரன் தன் கையிலிருந்த கல்லைப் பார்த்து "ஏ மந்திரக்கல்லே.



உடனே ஒரு குதிரை கொண்டுவா" என்றான். குதிரையும் வரவில்லை கிதிரையும் வரவில்லை. அதுகண்ட எஜமானன் "ஆ! ஆ! என்ன ஆச்சரியம் வேலைக்காரா! நல்ல வேலை செய் தாய்! என்ன அழகான குதிரை!" என்று தன் வேலைக்காரன் முதுகை நன்றாய்த் தட்டிக் கொடுத்து அவன் முதுகிலேறிக்கொண்டு சாட்டையாலே ஓங்கியடித்து அவனை ஊரெங்கும் தன்னைச் சுமக்கச்செய்தான். வேலைக்காரன் அந்த நாளில் தான் செய்த தப்பிதத்தை உணர்ந்ததுபோல மற்றெந்த நாளிலும் உணர்ந்ததேயில்லை.

P. R. ராஜசூடாமணி.

---

கொண்டாடல் ஒன்று கூடல் குறிப்பறிந்
திணக்கங் காட்டல்
தண்டாமல் ஏவல் கேட்டல் தாமென்ப
தடங்கி நிற்றல்
பண்டான உறவு பேசல் பரிந்துப
சரித்தல் எல்லாம்
உண்டான போதி லல்லால் உலகத்தி
லுண்டோ சொல்வீர். A.S.B.

## சமஸ்த ரட்சண அநுராகம்

## (சர்வஜீவதயை)

ஓர் அரசன் வேட்டையாடும் பொருட்டு ஒரு காட்டுக்குச் சென்றான். அவன் வேட்டையாடி வரும்போது ஒரு மிருகத்தைத் தொடர்ந்து செல்லும் அவசரத்தில் தனது பரிவாரங்களினின்றும் பிரிந்துபோனான். அத்தருணத்தில் சூரிய வெப்பம் மிகுதியாயிருந்தமையால் அவனுக்கு மிகுந்த தாகமுண்டாயிற்று. அவன் அருந்தும் நீர் எங்கேயாவது கிடைக்குமோவென்று, அக்காட்டில் தேடிச் செல்லும்பொழுது, ஒரு சிறிய தோட்டத்தைக் கண்ணுற்றான்; உடனே அத்தோட்டத்தில் நுழைந்தான். அந்த ஏழைத் தோட்டக்காரன் முன் அரசனை எப்போதும் பார்த்திராதபடியாலும் அரசன் வேட்டையாடுவதற்குரிய உடையைத் தரித்திருந்தபடியாலும் அவனை இன்னானென்று தெரிந்துகொள்ளவில்லை. அரசன் தனக்கு மிகுந்த தாகமாயிருக்கிறதென்றும் உடனே ஏதாவது குடிக்கக் கொடுக்கவேண்டுமென்றும் தோட்டக்காரனைக் கேட்டான். உடனே அவன் தோட்டத்திற்குள் நுழைந்து சில மாதுளம் பழங்களைப் பறித்து, அவற்றின் ரசத்தைப் பிழிந்து ஒரு பெரிய கிண்ணம் நிறைய ரசத்தை அரசனுக்குக் குடிக்குமாறு கொண்டுவந்தான். உடனே அவன் அதனை ஒருமிக்கக் குடித்தும், அவனுக்கு முற்றிலுந் தாகந்தீரவில்லை. அரசன்



மாதுளம் பழ ரசமடங்கிய இன்னுஞ் சில கிண்ணங்களைக் கொண்டுவரும்படி தோட்டக்காரனைக் கேட்டான். தோட்டக்காரன் அப்படியே அவற்றைச் சித்தஞ் செய்யப்போனான்.

தோட்டக்காரன் தன்னை விட்டகன்ற பின்னர் அரசன் தனக்குள் யோசிக்கலானான். "இத்தோட்டம் மிகவும் செழிப்புள்ளதாக இருக்கிறது. அரை நிமிஷத்தில் இத்தோட்டக்காரன் எனக்கு ஒரு பெரிய கிண்ணம் நிறைய அதி மதுரமான புதிய மாதுளம்பழ ரசத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். இப்படிச் செழித்து ஓங்கி வளருகின்ற இத்தோட்டத்துச் சொந்தக்காரனுக்கு அதிக வரியை விதிக்கவேண்டும்" என்றிவ்விதமாகப் பல எண்ணங்களை எண்ணலாயினன். தோட்டக்காரனோ ஒருமணி நேரமாயும் அரசனிடம் திரும்பி வரவில்லை; அதிக காலதாமதமாயிற்று. அரசன் ஆச்சரியப்பட்டு, "முதல்முதலில் தாகத்துக்கு ஏதாவது கொண்டுவரும்படி கேட்டபோது ஒரு நிமிஷத்துக்குங் குறைவான நேரத்தில் அந்த மாதுளம்பழ ரசத்தைக் கொண்டுவந்தான். இப்போது சுமார் ஒருமணிநேரமாக மாதுளம்பழ ரசத்தைப் பிழிந்தும் கிண்ணம் நிறையவில்லை போலும்! இதற்குக் காரணம் யாது?" என்று தன்னுள் ஆலோசிக்கலானான்.

ஒருமணி நேரஞ் சென்றபின் ஒரு கிண்ணம் அரசனுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், பழத்தின் ரசம் கிண்ணம் நிறைய இல்லை. அரசன் இப்பொழுது

"கிண்ணம் நிறைய ரசம் இல்லாததற்கும், முன் கொண்டுவந்தபோது அவ்வளவு சீக்கிரத்தில் கிண்ணம் நிறையக் கொண்டுவந்ததற்குங் காரணமென்ன?" என்று தோட்டக்காரனை வினவினான். ஞானியாயிருந்த அந்தத் தோட்டக்காரன் "மாதுளம்பழ ரசம் நிறைந்த முதற் கிண்ணத்தை நான் கொண்டுவரப் போனபோது எமது அரசர் அத்தியந்த நல்ல எண்ணங்களுள்ளவரா யிருந்தார்; இரண்டாவது கிண்ணத்தைக் கொண்டுவரப் போனபோது எமது இறைவனுடைய பட்சமும் கருணையுமுள்ள சுபாவமானது மாறுபட்டிருக்கிறது. இத்தோட்டத்திலுள்ள மாதுளையின் உயர்ந்த தன்மை இவ்வளவு சீக்கிரம் மாறுபாடடைவதற்கு வேறு காரணங் கூற என்னால் முடியவில்லை" என்றான்.

இதனைக்கேட்ட அரசன் தன்னுள் சிந்திக்கலாயினன்; உடனே தோட்டக்காரன் சொன்னது முற்றிலும் உண்மையெனத் தெளிந்தான். அரசன் முதல் முதல் தோட்டத்திற்குள் நுழைந்தபோது அங்குள்ள பிரஜைகளின்மீது அன்புள்ளவனாயும், தயையுள்ளவனாயும், கிருபையுள்ளவனாயும் அவர்களுடைய தரித்திரத்திற்காக அநுதாபமுள்ளவனாயுமிருந்தான். ஆனால், கிழவனாகிய தோட்டக்காரன் ஒரு கிண்ணம் மாதுளம் பழ ரசத்தை அவ்வளவு விரைவில் கொண்டுவரவே அவ்வரசன் மனம் மாறுதலடைந்தது; எண்ணங்களும் வேறுபட்டன. அரசனிடம் இயற்கை ஒழுங்கிற்கு ஐக்கியமின்றி முரணாஞ் சுபாவம் ஏற்பட்டது; படவே



அது தோட்டத்திலுள்ள மாதுளம் பழங்களின் இயற்கையையும் மாறும்படி செய்தது. அன்பின் நியதியை அரசன் பங்கப்படுத்தின அந்தநிஷமே மரங்களும் தம் சாரங்களை அரசனுக்குக் கொடுக்காமல் நிறுத்த ஆரம்பித்தன.

இக்கதை மெய்யாயினுஞ்சரி, பொய்யாயினுஞ்சரி, அதுபற்றி நமக்கு அவசியமில்லை. இக்கதை நமக்குக் கற்பிக்கும் உண்மையோ மறக்க முடியாதது. அஃதாவது பிரகிருதியோடு ஒத்துவாழும் பரியந்தமும், இயற்கைப் பொருள்களுள் ஒவ்வொன்றிற்கும் உனக்குமுள்ள ஒற்றுமையை யுணர்ந்து அதன்படி ஒழுகும் பரியந்தமும், உன்னைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு விஷயமும், காற்றும் அலையுங் கூட உன் பக்கமாகவந்து உனக்கு அநுகூலத்தை யுண்டுபண்ணுவதாயிருக்கும். எந்த நிமிஷத்தில் நீ அவற்றோடு முரண்படுகிறாயோ அந்த நிமிஷத்தில், உன் சிநேகிதரும் பந்துக்களும் உனக்கு விரோதிகளாவர். அந்த நிமிஷத்தில் உலகமுழுவதும் உனக்கு விரோதமாக எழும்பி உன்னைச் சின்னாபின்னப்படுத்தும். இத்தெய்வீகமுள்ள அன்பின் நியதியைச் சரியாகத் தெரிந்துகொண்டு அதன்படி ஒழுகு; அன்பு காரிய சித்திக்கு உயிர் நிலையான ஒரு காரணமாகும்.

அன்பே சிவமென்றறி.

---

# பழநி முத்துப்பாட்டு

1. கனகமக மேருமுத்து—கார்த்திகேயன் அணியுமுத்து
வனவல்லிக் கேற்றமுத்து—வானவர்கள் வாங்குமுத்து
2, பச்சைவளை செய்யுமுத்து—பதக்கத்துக்கு எற்றமுத்து
இச்சையுடன் வாங்குமுத்து-ஈசுவரியாள் அணியுமுத்து.
3. மாலைகட்ட நல்லமுத்து—மங்கையர்க்கு எற்றமுத்து
வேலவர்க்கு வேண்டுமுத்து—வேல்விழியார் அணியு
[முத்து
4. அஞ்சலென்றே அருளுமுத்து—அன்பர்துயர் தீர்க்கு
[முத்து
குஞ்சரிக்கு இனியமுத்து-குரைகடலில் தோன்றுமுத்து
5. தற்பரனார் தந்தமுத்து—தாண்டவஞ் செய்தாடுமுத்து
விற்பன்ன விவேகியர்க்கு—விதிவிலக்கும் நல்லமுத்து
6. சூரனொளி மாற்றுமுத்து—சுந்தரியை மணந்தமுத்து
பாரினிலே வந்தமுத்து—பரமனுடன் கூட்டுமுத்து
7. ஜாதியிலே நல்லமுத்து—சங்கரியாள் தந்தமுத்து
ஜோதிமய மானமுத்து—சொல்லரிய நல்லமுத்து
8. அலைகடலில் தோன்றுமுத்து—அம்பரருக் கின்பமுத்து
பலகலைகள் ஆக்குமுத்து—பழவினைகள் நீக்குமுத்து
9. வேய்முத்து தந்தமுத்து—விலையில்லா ஆணிமுத்து
பேய்மனமே இந்தமுத்து பிறப்பில்லாத் தெய்வமுத்து
10. ஆறுமுகமானமுத்து—அரியயனும் தேடுமுத்து
மாறுபடா நல்லமுத்து—மகிமையுள்ள செல்வமுத்து
11. பிரணவப்பொருள் உரைத்தமுத்து—பிரமனைவிலங்
கிட்டமுத்து
வரமருளும் உமையவளின்—கரமலரில் வயங்குமுத்து
12, கழலிணைதந்து காத்தமுத்து—கார்த்திகைப் பெண்பால்
[குடித்தமுத்து.
பழமறைகள் அளித்தமுத்து—பழநியிலே செழித்த
[முத்து.
13. சிந்தனையில் சிவாநந்த—தேசிகரின் செல்வமுத்து
பந்தமறக் குஞ்சரியைப்—பக்தருடன் கூட்டுமுத்து

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்

# அறிஞனின் சேர்க்கை

ஒரு நாள் மாலையில் நான்—சோமாஸ்கந்தன், சாமிநாதன்—எனப் பெயர்கொண்ட சிறுவர் இருவருடன்—மதுரை—ஓரிஜனல் நாடகக்கம்பெனி அதிபர் ஸ்ரீமான் சச்சிதாநந்தம் பிள்ளையவர்களைப் பார்க்கப்போயிருந்தேன். அவர் இல்லத்தில் அவரைக் கண்டு, அவர் இனியமுகங்கொண்டு இஷ்டரை உபசரிக்குங் குணமுடையவராதலால், அவரிடம் நெடுநேரம் வரையில் பலவிதமாய் நாடகத்தைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன்.

தற்காலம், மதுரை ஓரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனிதான்—ஒழுங்கான முறையில் நடைபெறுகிறதென்று ஒருவர் சுதேசமித்திரனில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டதாக நான் கூறினேன். பெருந்தன்மை பொருந்திய அவர்கள், "அப்படிச் சொல்லுவதற்கில்லை. அது அபிமானியொருவர் எழுதியதாயிருக்கலாம். அப்படி யிருந்தாலும் அதன் புகழ்ச்சிக்குரியவர் நானல்ல; அபிமானிக்கும் அறிஞரே"—என அழகிய பதிலளித்தார்.

இப்படிப் பேசுகையில், இடையில் குருவின் பெருமையைப் பேசி, குரு வின்றி எவனும், (ஈசனை நேரிற்

கண்டு பேசும் பாக்கியம் பெற்றவனும்) பவத்தொடக்கொழிந்து வீடு பெறுதல் இயலாதென்று பெரியாரும் சாஸ்திரமும் கூறுகின்றனர் என ஒரு நியாயங்காட்ட நேரிட்டது. அச்சமயம்—இந்தப் போதனையைப் பக்தவிஜயம் என்னும் புத்தகம் கோராகுயவர்என்ற பக்தரின் சரித்திர மூலமாய்ப் போதிக்கின்றது—என்று கூறி, அருகிலிருந்த இரண்டு சிறுவரையும் நோக்கி, "குழந்தைகளே! பக்தவிஜயம் நீங்கள் வாசித்திருக்கிறீர்களே, அதில் கோராகுயவர் சரித்திரத்தில் — குருவின் சம்பந்தமாய் சொல்லப்பட்டுள்ள விஷயமென்ன? சொல்லுங்கள் —— பிள்ளையவர்கள் கேட்கட்டும்" என்றேன்.

பிள்ளையவர்கள் அச்சமயம் இளமுறுவல்கொண்டு சிறுவர்களை ஆவலாய்க் கவனித்தார்கள். சிறுவர் இருவரில், பெரியவனாகிய சாமிநாதன் பதில் சொல்லச் சற்றுத் தயங்கினான். ஆனால் சிறுவனாகிய சோமாஸ்கந்தன் உற்சாகத்துடன், அச்சரித்திரத்தில் "வேந்தபானை யேது—வேகாதபானை எது—என்கிற பிரஸ்தாபமூலமாய்க் குரு அவசியம் என்பதைக் காட்டியிருக்கிறது" என்றான். நான் "அதை விளக்கிச் சொல்" என, அவன் கீழ்வருமாறு விளக்கினான்—

"— கோரா குயவர் என்கிற பக்தர் வீட்டில், ஒரு நாள் ஞானதேவர், நாமதேவர் முதலிய பல பக்தர்கள் கூடியிருந்தனர். அப்பொழுது ஞானதேவர், கோரா குயவரைப் பார்த்து, தங்களைக் காட்டி—"இந்த கூட்



டத்தில் **"வெந்த பானை எது? வேகாத பானை எது?"** கூறும்" என்று பரிகாசமாய்க் கேட்டார். குயவர் உடனே தாம் மண்பாண்டம் செய்வதற்கு உபயோகிக்கும் மட்டப்பலகையை எடுத்துவந்து அங்கிருந்த பக்தர்கள் ஒவ்வொருவருடைய தலையிலும் தட்டிக்கொண்டே போய்க் கடைசியில் நாமதேவருடைய தலையிலும் தட்டினார். அவர் "அப்பாடா"—என்று தலையைத் துடைத்துக் கொண்டார். அது கண்ட குயவர், **"இவர் தான் வேகாத பானை"** என்றார்.

நாமதேவர் அதைக் கேட்டதும் வருத்தமுற்றுப் பகவானை யெண்ணி, 'ஜகதீசா! பண்டரிநாதா! நான் உன்னிடம் மெய்யன்பு செய்வதும்—நீ என்னிடம் பேரன்புகொண்டு நினைத்தபோது வந்து அநுக்கிரஹம் செய்வதும் உலகமறிந்த விஷயம். அப்படிப்பட்ட என்னைப் பார்த்து—இந்தக் குயவர் ஏன் இப்படிச் சொன்னார்?' என்று வினவி வருந்தினார். பகவான் உடனே அங்கே தோன்றி, 'நாமதேவ, இன்னும் நீ குரு உபதேசம் பெறவில்லை. குரு உபதேசமில்லாத உன்னுடைய பக்தி பயன் தராது—ஆதலினாலேதான்—குயவர் தட்டியது உமக்கு வலித்தது. அவரும் உன்னை, 'வேகாத பானை' என்றார் என்று கூறி மறைந்தார். பின் நாமதேவர் குருவைத் தேடிச் சென்றார்— என்று சொல்லுகிறது" என்று கூறி முடித்தான்.

பிள்ளையவர்கள் கேட்டு மனமுவந்து சரேலென வீட்டிற்குட் சென்று பெட்டியைத் திறந்து—இரண்டு

பவுன் நாணயம் எடுத்துவந்து—இரு சிறுவர்களுக்கும் தலைக்கொரு பவுன் தந்து, "நீங்கள் அடுத்த தடவை வரும்போது இன்னும் நன்றாய்ப் படித்து இப்படிப்பட்ட விஷயங்களை நன்றா யுணர்ந்து தெரிந்துகொள்பவர்களா யிருக்கவேண்டும்" என்றார்கள்.

பின்பு நான் விடைகொண்டு சிறுவருடன் புறப்பட்டு வழிநடந்தேன். போகும்போது, சாமிநாதன் என்னைப் பார்த்து—"ஓர் அதிசயம். நான் கேள்விக்குப் பதிற் சொல்லக் கூசிச் சற்றுத் தயங்கினேன். அப்படியிருந்தும் எனக்கும் பவுன் கிடைத்தது; அது ஏன்?—பாலொடு கலந்த நீரும் பெருமையடைகிறது! பூவொடு சேர்ந்த நாரும் மணம் பெறுகிறது! மந்தையொடு சேர்ந்த குருட்டுப் பசுவும் வீடு வருகிறது. அஃதன்றிக் கற்பகத்தருவைச் சேர்ந்த காகமும் அமுதுண்ணும்—என்று கூறுவதுண்டல்லவா? இந்த நியாயப்படி, வயதிற் சிறியவனெனினும் அறிவிற் பெரியவனாகிய சோமாஸ்கந்தனுடன் இருந்தபடியால் எனக்கும் பவுன் கிடைத்தது. இதனாலேதான்—'பெரியாரைத் துணைக்கொள்' என்றாள் ஔவை"—எனக்கூறி புன்முறுவல் காட்டினான்.

நான் கேட்டு ஆநந்தமடைந்து, "சாமிநாதா!—நீ இந்த நியாயத்தைப் பிள்ளையவர்களிடம் சொல்லியிருந்தால், உன்னுடைய இந்த அறிவு, அதாவது, சிறியவன் நம்மை மிஞ்சிவிட்டானே என்கிற பொறாமை



ஏற்படவேண்டிய இடத்தில் மதிப்புவைத்துத் தக்க ஆதரவினால் பெருமைபடுத்துவது, அறிஞர் அவர்களுக்குப் பரமாநந்தத்தைக் கொடுத்திருக்குமே—அது தவறிவிட்டாய் — நல்லது — பெரியார் துணை—என்றாயே—பெரியார் என்றால் யார்?—சொல் — பார்ப்போம்" என்றேன்.

சாமிநாதன்—"பெரியார் என்றால் வயதிற் பெரியார் அல்லர், அறிவிலே பெரியார்" என்று கூறினான்.

நான் — "சந்தோஷம்! அன்பரை இன்பத்திலும் துன்பத்திலும் கைவிடாம லாதரிக்கும் பரமகிருபாநிதியாகிய சிவசுப்ரமண்யக்கடவுள்—நீங்கள் அறிவிலே சிறப்புற ஆதரிப்பாராக" என்றேன்.

குழந்தைகளே ஓர் உபதேசம் இச்சமயத்தில் கேளுங்கள்—அருணகிரிநாதர் சொன்ன அநுபூதியில்

"எந்தாயு மெனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே"

என்னும் இத்துதி பரமமந்திரம்—இதை நாடோறும் காலையிலும் மாலையிலும் சொல்லித் துதியுங்கள் முருகனை.

(பாலவிநோதினி).

தீநடியவன் புத்தி தடுமாறும்
நல்லவன் புத்தி தெளிந்திருக்கும்.

# குள்ள நரியின் மந்திரம்

ராஜா பிரம தத்தன் காசி நகரில் அரசாண்டு வரும் நாளில், போதிசத்துவர் அரண்மனைப் புரோகிதராக இருந்தார். போதிசத்துவர் நான்கு வேதங்களையும் பதினெண் கலைகளையும் நன்றாகப் பயின்று கீர்த்திபெற்றிருந்தார். உலகத்தை தன்வயப் படுத்தும் மந்திரத்தையும் அறிந்திருந்தார்; ஒரு நாள் அம்மந்திரத்தை ஜபிக்கத் தனியிடந்தேடிப் புறப்பட்டார். நகருக்கு வெளியே வெகுதூரஞ்சென்று உயர்ந்திருந்த கற்பாறை ஒன்றின்மீது உட்கார்ந்துகொண்டு அவர் மந்திர உச்சாடனஞ் செய்ய ஆரம்பித்தார். அம்மந்திரத்தை உச்சரிக்கையில் மற்றொருவர் அறிந்தால் பலிக்காது. மிக இரகஸியமாக அம்மந்திரத்தை ஜபிக்க வேண்டும். போதிசத்துவர் அதை அறிந்து வெகு ஜாக்கிரதையாக ஜபஞ்செய்ய ஆரம்பித்தார். கற்பாறையின் சந்து ஒன்றில் குள்ளநரி ஒன்று பதுங்கிக்கொண்டிருந்தது. அது முற்பிறப்பில் சகலகலைகளையும் கற்றறிந்த பிராமணன். பாபகர்மத்தால் அது இப்பிறப்பில் குள்ள நரியாகப் பிறந்தது. போதிசத்துவர் மந்திர உச்சாடனஞ் செய்வதை அங்குள்ள நரி வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டே அம்மந்திரங்களைக் கற்றுக்கொண்டது. இதை போதிசத்துவர் அறியார். போதிசத்துவர்



மந்திர ஜபம் முடித்துக்கொண்டு சந்தோஷத்துடன், 'ஜபம் முடிந்துவிட்டது. நல்ல வேளையாக ஒருவருமில்லை. இனி நமக்கு வெற்றியே' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், கற்பாறையின் கீழிருந்த குள்ள நரி 'பிராமணா! நீ ஜபித்த மந்திரங்களை நான் கற்றுக் கொண்டாய் விட்டது; உன்னைவிட நான் அம்மந்திரத்தை நன்றாய் அறிவேன்' என்று கூறிக்கொண்டே ஓடிற்று. போதிசத்துவர் குள்ள நரியைத் துரத்திக் கொண்டே ஓடினார். அது கொஞ்சதூரஞ் சென்று காட்டுக்குள் மறைந்துபோயிற்று. போதிசத்துவர் மனவருத்தத்துடன் நகர்ப்புரம் திரும்பிச் சென்றார் காட்டுக்குச் சென்ற குள்ளநரி அம்மந்திர சக்தியினால் தன் இனத்தார்களை யெல்லாங் கூப்பிட்டு நிற்கவைத்தது. பிறகு, அது கரடிகள், யானைகள், பன்றிகள், சிங்கங்கள் முதலிய நாற்காற் பிராணிகளை யெல்லாம் வரவழைத்து வரிசை வரிசையாக நிற்கவைத்தது. அது தன்னுடைய இனத்திலேயே பெண் குள்ளநரி யொன்றைக் கலியாணஞ் செய்துகொண்டு சபதாதன் என்னும் பெயரினைப் பெற்றுப் பெரிய யானைகளை நிற்கவைத்து அவைகளின்மீது சிங்கம் ஒன்றை நிறுத்தி, அச்சிங்கத்தின் மீது தானும் பெண்நரியுமாக ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு பரிபாலனஞ் செய்தது.

இவ்வாறு, சபதாதன். தான் அரசனாயிருப்பதைக் கண்டு கர்வமடைந்து, காசி நகரைக் கைப்பற்ற எண்ணங் கொண்டது. உடனே, சபதாதன் நாற்காற் பிரா

ணிகள் அனைத்தையும் அழைத்துக்கொண்டு காசி நகருக்குப் புறத்தேயுள்ள சமவெளியில் வந்து தங்கிற்று. பிறகு, காசிராஜனுக்குத் தூதொன்றை அனுப்பி, நகரை விட்டுவிடும்படி சபதாதன் கட்டளையிட்டது. காசிநகர் வாசிகள், லட்சக் கணக்கான பலஜாதி மிருகங்கள் கூடியிருப்பதை அறிந்து, மிகத் திகிலடைந்து கோட்டை வாயில்களை மூடித் தாளிட்டுக் கொண்டார்கள். மந்திரசக்தியால், குள்ளநரி அடைந்த பலத்தைக் கண்ட போதிசத்துவர், அரசனிடம் வந்து மிருகஜாதிகளின் படையெடுப்பைப் பற்றிக்கூறி, 'அரசே! பயப்படவேண்டாம். சபதாதன் என்னும் குள்ளநரியுடன் சண்டையிட எனக்கு உத்தரவு கொடுங்கள்' என்றார். அரசனும் போதிசத்துவர் இஷ்டம்போல் விட்டுவிட்டான். போதிசத்துவர் கோட்டை மதில் சுவரின்மீது ஏறிக்கொண்டு, "சபதாதராஜனே, இந்நகரைக் கைப்பற்ற என்ன செய்வாய்?" என்று கேட்டார். சபதாதன் உடனே, "போதிசத்துவா! சிங்கங்களை விட்டு கர்ச்சிக்கச் செய்வேன். அக்கர்ச்சனையைக் கேட்கும் சனங்கள் திகிலடைந்து ஓடிப்போவார்கள். அப்பொழுது நகரை நான் கைப்பற்றிக்கொள்வேன்' என்றது. 'அப்படியா, நல்லது' என்று கூறிக்கொண்டே போதிசத்துவர் மதிலை ஒரங்குலம் விட்டிறங்கி 'நகரவாசிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காதுகளில் மாவடைத்துக் கொள்ளவேண்டும்', என்று பறை சாற்றினார்.

நகர ஜனங்கள் போதிசத்துவருடைய கட்டளைப்படி மிருகங்களின் பயங்கரமான சப்தங்கள் விழாம



லிருக்குமாறு தங்கள் காதுகளில் கனமாக மாவைத்து அடைத்துக்கொண்டார்கள். ஜனங்கள் தம் உத்தரவைக் கடைப் பிடித்து நடந்துகொண்டார்களென்று அறிந்த பிறகு, போதிசத்துவர் மீண்டும் கோட்டை மதில்மீது ஏறிக்கொண்டு "சபதாத ராசனே!" என்று கூப்பிட்டார். சபதாதன், "என்ன, பிராமணா" என்றது. போதிசத்துவர், "சபதாத ராசனே! எப்படி இந்தக் காசி நகரைக் கைப்பற்றுவாய்" என்று மீண்டும் கேட்டார். அதற்கு, சபதாதன் "பிராம்மணா! இதோ, இந்தச் சிங்கங்களைக் கர்ச்சிக்கும்படி கட்டளையிடுவேன். அக்கர்சனையைக் கேட்டு ஜனங்கள் பயந்து ஓடுவார்கள். அப்பொழுது நகரைக் கைப்பற்றிக்கொள்வேன்" என்று மீண்டும் பதில் கூறிற்று. போதிசத்துவர், "சபதாதனே! சிங்கங்களைக் கர்ச்சிக்கும்படி செய்ய உன்னால் முடியாது. அடர்ந்த பிடரியும் பிங்கலவர்ணமுங்கொண்ட இந்த கம்பீர மிருகங்கள், கிழக்குள்ளநரியான உன்னுடைய வார்த்தைகளை ஒரு நாளும் கேட்காது" என்றார். சபதாதன், அவ்வார்த்தையைக் கேட்டு மிக கர்வத்துடன், "பிராமணா! இதர சிங்கங்கள் எனக்குக் கீழ்படிதலோடு நான் உட்கார்ந்திருக்கும் இந்த அரச சிங்கத்தையும் கர்ச்சிக்கச் செய்வேன்" என்று கூறிற்று. போதிசத்துவர் "சபதாதனே! உன்னால் ஆகாது; அப்படியாகுமானால், கர்ச்சிக்கச்செய் பார்ப்போம்" என்றார். உடனே, சபதாதன் தான் உட்கார்ந்திருந்த சிங்கத்தைத் தட்டிக் கர்ச்சிக்கும்படி தூண்டிற்று. அச்சிங்கம் கர்ச்சித்தது.

இதர சிங்கங்களும் கர்ச்சித்தன. சிங்க கர்ச்சனையைக் கேட்ட யானைகள் வீறிட்டு திக்குமுக்காடி ஓடின. சபதாதன் உடனே தரையில் வீழ்ந்தது. மிருகங்களின் ஓட்டத்தால் சபதாதன் தரையோடு தரையாய் அறைப்பட்டது. மிருகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு சண்டையிட்டன. அப்பெருஞ் சண்டையில் சிங்கங்கள் தவிர மற்றெல்லாப் பிராணிகளும் மாண்டன. பன்னிரண்டு காததூரம் வரை செத்த மிருகங்கள் வீழ்ந்திருந்தன. போதிசத்துவர் அம்மிருகச் சண்டையின் காட்சியைக் கண்குளிரக் கண்டு, 'இனி மிருகங்களால் பயமில்லையென்றறிந்து கோட்டை வாயில்களைத் திறக்கும்படி கட்டளையிட்டார். ஏவலர் கோட்டை வாயில்களைத் திறந்தார்கள். பிறகு, ஜனங்கள் காதுகளில் அடைத்துவைத்திருக்கும் மாவை எடுத்துவிடும்படி போதிசத்துவர் கட்டளையிட்டார். ஜனங்கள் தங்கள் காதுகளிலிருந்த மாவை எடுத்துவிட்டுச் சந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள். ஜனங்கள் அம்மிருகங்களின் மாமிசங்களைக் களிப்புடன் உண்டு மிகுதியுள்ளவைகளை உலர்த்தி வைத்தார்கள். மாமிசங்களை உலர்த்தும் வழக்கம் அதுமுதற்கொண்டு ஏற்பட்டது. போதிசத்துவர் இவ்வாறு காசி நகரைக் காப்பாற்றி அரசனுக்குப் பல தர்மோபதேசங்கள் செய்து வாழ்ந்தார்.

### புத்திமான் பலவான்.

நல்ல நிலையிலிருக்கும்போது நேசமாயிருப்பவர்கள் பகைவர்கள்—கெட்ட நிலையிலிருக்கும்போது கைதூக்கிவிடுபவரே நேசர்கள்.

## க்வைனாவைக் கண்டு பிடித்தது யார்?

சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர் டில்லி நகரில் ஷாஜஹான் சக்ரவர்த்தி அரசாட்சி செய்துகொண்டிருந்த காலத்து ஸ்பெயின் தேசத்தினர் பெரு எனும் தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஆண்டுவந்தனர். இப் பெரு தேசமானது புது உலகமாகிய அமெரிக்கா கண்டத்திலுள்ள ஓர் சிறப்புற்ற நாடு. இந்துஸ்தானத்தில் பஞ்சாப், வங்காளம் மத்திய மாகாணங்கள் என அநேகம் பிரிவுகள் இருப்பதேபோன்று, பெரு தேசத்திலும் பலமாகாணங்களுண்டு. தேசமுழுவதிற்கும் ஓர் ராஜப் பிரதிநிதியும் அவரின்கீழ் மாகாணம் ஒவ்வொன்றிற்கும் ஓர் கவர்னருமாக இருந்தனர். ஓர்காலத்தில் சிங்கன் பிரபு என்பவர் பெரு தேசத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்தார்.

சிங்கன் என்பது ஸ்பெயின் தேசத்திலுள்ள ஓர் நகரம். அந்நகரத்தில் நாம் மேற்சொன்ன சிங்கன் பிரபுவுக்கு மிகுந்த பூஸ்திதியுண்டு. அவர் மிக்க புகழ்பெற்றவர். ஐரோப்பியாவிலுள்ள பல அரசர்கள் அவருக்கு நண்பர்கள். அவரது ஞாபகார்த்தமாக இடப்பெற்ற பெயரே "க்வைனா" என்பது.

இந்தியாவைப் போன்றே பெரு தேசத்திலும் அக்காலத்தில் விஷஜுரம் மிகுதியாக உண்டு. சிங்கன் பிரபு ராஜப்பிரதிநிதியாக இருந்தகாலத்து "டான்லூயி" என்பவர் பெருவிலுள்ள ஓர் மாகாணத்துக்குக் கவர்னராக இருந்தார். அவருக்கு அடிக்கடி வெளிப்பிரயாணம் செய்வதில் விருப்பமதிகம். ஒரு முறை அவர் தம்பரிவாரங்களோடு வெகுநாட்களாய்க் காட்டின் வழியே பிரயாணம் செய்துவிட்டுத் தம் ஊருக்கு மீளும் சமயம் அவருக்குக் கடுமையான ஜுரம் வந்துவிட்டது. ஒவ்வொரு தினமும் மாலை நேரத்தில் ஜுரம் தவறாமல் கடுமையாக வந்தது. சில தினங்களுக்குள் அவர் மிக்க பலஹீனத்தையடைந்தார். குதிரைச் சவாரி செய்யவும் திறனற்றுப்போனார். அவருடன் கூடவந்த ஜனங்கள் சமீபத்திலிருந்த கிராமத்திற்

குள் சென்று கிராமாதிகாரியிடம் போய்க் கவர்னரின் தேக நிலையைச் சொல்லி, அவர் இப்பொழுதே ஊருக்குச் செல்ல வேண்டுமென விரும்புவதால், ஒரு பல்லக்கில் அவரைத் தூக்கிக்கொண்டு செல்வதற்குச் சில போயிகளைத் திட்டம் செய்து தரவேண்டுமெனச் செப்பினர். அவ்வாறே கிராமத்தலைவனும் ஏற்பாடு செய்துவிட்டு வேறு சில மனிதருடன் கவர்னரைக் காணச் சென்றான்.

கூடாரத்தில் அதிக அபாயநிலையிலிருந்த கவர்னரைக் கண்டு, அவ்வபாய நிலையில் அவர் ஊருக்குச் செல்லவேண்டாமென்றும், இன்னும் சில தினங்கள் இங்கேயே தங்கி நாங்கள் தரும் மருந்தையுண்டு சுகம் ஏற்பட்டபின் செல்லலாமெனவும், அதுவரை தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய நாங்கள் சித்தாமாயிருக்கிறோமெனவும் அவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள்.

அவர்கள் விருப்பத்திற்கிணங்க கவர்னரும் அங்கேயே இருப்பதாக ஒப்புக்கொண்டார். உடனே கிராமத்திலிருந்து சிலர், பக்கத்திலிருந்த காட்டிற்குப் போய் செந்நிறமுள்ள ஒரு பட்டையைக் கொணர்ந்து, அதை நன்றாகப் பொடித்து, அப்பொடியை ஜலத்தில் கரைத்து கவர்னருக்குத் தந்தனர். சாப்பிடுவதற்கு அது மிகவும் கசப்பாக இருந்தது. உண்ட சிறிது நேரத்திற்குள்ளாக அவருக்கு ஓர்வித மயக்கமுண்டாயிற்று. பின் சிறிதுநேரத்திற்குள் ஜுரம் குறைந்துவிட்டது. மறுநாள், வழக்கமாக ஜுரம் வரும் மாலை நேரத்தில் அவரது வேலையாட்கள் வந்து பார்த்து, அவர் ஜுரமில்லாமல் சும்மா இருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று, பயங்கரமான ஜுரத்தை இவ்வளவு சீக்கிரத்தில் நீக்கின இம்மரப்பட்டையின் சிறந்த குணத்தைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசிக்கொண்டனர்.

பின்னும் சில தினங்கள் வரை அம்மருந்தையுண்டு கவர்னர் பூரணசுகமடைந்தார். பிறகு அவர் கிராமவாசிகளைத் தம்



மழைத்து, தம்முடன் காட்டுக்கு வந்து அம்மரத்தை தனக்
காட்டும்படி கேட்டுக்கொண்டார். அவர்கள் அவ்வாறே
ன்று காண்பிக்க, கவர்னர் அதன் இலை, பூ, பட்டை முத
வற்றை மாதிரிக்காக எடுத்துக்கொண்டார். இம்மரம்
ரு தேசத்துக் காடுகளிலும் மிகுதியாக உண்டு.

இது நடந்த கொஞ்சகாலத்திற்குப்பின் சிங்கன் பிரபு
ர் மனைவிக்கு விஷஜுரம் கண்டது. வைத்தியர்களால் கை
ப்பட்டு இறந்துபோகும் நிலையிலிருந்த தன் மனைவியைப்
றி ராஜப்பிரதிநிதிக்கும் மற்றவர்களுக்கும் உண்டான கவ
ந் களவில்லை. இதையறிந்த கவர்னர் மிக்க கவலைகொண்டு
ரை உடனே காட்டிற்கனுப்பி, மேற்சொன்ன மரத்தின்
டையை வருவித்து, வேகமாய் ஓடக்கூடிய ஓர் மனிதனி
அப்பட்டையையும் அப்பட்டையின் குணவிசேஷங்க)ளைப்
றியும், உபயோகிக்கவேண்டிய முறையைப்பற்றியும் எழு
ஒரு கடிதத்தையும் அவனிடம் கொடுத்து ராஜப்பிரதிநிதி
ர் மனைவிக்கு வைத்தியம் செய்யும் வைத்தியரிடம் கொடுக்
படி அனுப்பினர்.

கடிதத்தையும் பட்டையையும் பெற்றுக்கொண்ட வைத்
ர் மனமகிழ்வடைந்து பட்டையைப் பொடிசெய்து வெந்
ற் கலந்து அச்சீமாட்டிக்குக் கொடுத்தார். சில நாழிகை
வில் ஜுரம் நின்றுபோக அவள் மிக்க சுகத்தை யடைந்
ள். மிக்க புகழ் வாய்ந்த சிங்கன் பிரபுவின் மனைவிக்கு
ண்டான ஜுரத்தை நீக்கிய அம்மரத்திற்கு "சிங்கோனா"
ற பெயர் உண்டாயிற்று. சிங்கன் பிரபு மறுபடியும் ஐரோப்
விற்குப் போனபொழுது அப்பட்டையை விசேஷமாகக்
ாண்டுபோனார். அப்பொழுதுதான் அம்மருந்து முதல்
தல் ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்டது. அப்பட்டை
ரின்றும் செய்யப்பெறும் மருந்திற்குக் "குவைனா" என்று
யர் வந்தது.

"ஆநந்தபோதினி."

---

## ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் லோகோப காரியில் எழுதிய அநுபவ வாக்கியங்கள்.

தேகம் ஆரோக்கியமாக இருக்கும்போதும், ஆரோக்கியம் கெட்டிருக்கும்போதும் சூரியன் ஒளிபடக்கூடிய இடத்தில் எப்பொழுதும் வசிக்கவேண்டும்.

ருஷியா சக்ரவர்த்திக்கு முன்னர் வைத்தியராயிருந்த ஸர் ஜேம்ஸ் வில்லி என்பவர் அத்தேசத்திலுள்ள வைத்திய சாலைகளில் நீண்ட காலமாகக் கவனித்ததில் சூரிய கிரணங்கள் படும் அறைகளில் இருந்த நோயாளிகளில் எத்தனைபேர் மரித்தார்களோ அதனிலும் நான்கு மடங்கு அதிகமாகச் சூரியன் ஒளிபடாத அறைகளில் இருந்த நோயாளிகள் மரித்ததாகக் கூறியிருக்கிறார்.

யாராவது விஷத்தைத் தின்றுவிட்டால் உடனே ஒரு தேயிலைக் கரண்டி நிறையக் குவிய அளந்த உப்பையும் அது போலவே அளந்த மற்றொரு தேயிலைக் கரண்டி கடுகையும் ஒரு தம்ளர் ஜலத்தில் போட்டுக் குடித்துவிட்டால் அதன் வேலை வெகு துரிதத்தில் நடக்கும். பின்னர் ஒரு கோப்பை காப்பி நீரில் இரண்டு முட்டைகளின் வெள்ளைக் கருக்களை உடைத்துவிட்டுக் கொடுக்கவும். காப்பி நீர் கிடையாவிட்டால் வெள்ளைக் கருக்களை மாத்திரம் கொடுக்கவும்.

அபின் விஷத்தைத் தின்றுவிட்டால் காப்பித்தூளை அதிகமாகப் போட்டுத் தயாரித்தக் காப்பியை குடிக்கச்செய்து விஷம் இறங்குகிறவரை உலாத்திக்கொண்டிருக்கச் செய்யவும்.



இலேசாகத் தீயானது பட்டுக் காந்தலுண்டாகுமானால் தீப்பட்ட பாகத்தைத் தண்ணீரிலோ மாவிலோ முக்கி விட வேண்டும். தீப்பட்டுத் தோல் போய்விட்டால் அந்த இடத்தில் வார்னிஷைத் தொட்டுப் போட்டுவிடவும்.

தண்ணீரில் தவறி விழுந்துவிட்டால் நீந்தத் தெரியாதவர்கள் மூக்கையும் வாயையும் வெளியே நீட்டிக்கொண்டு நீரின்மேல் மல்லாந்து காலை மடக்கிக் கையை விரித்து மிதக்கவும். இவ்வனம் யாரும் எளிதில் செய்யலாம். இதைத்தான் ஜலஸ்தம்பனம் என்று சொல்லுகிறார்கள்.

மனிதன் களைத்துக் கீழே விழுந்துவிடுவானானால் அவன் கால் கைகளை நீட்டி மல்லாந்து படுக்கவைக்கவும்.

தேகம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானாலும் அடிக்கடி ஜலதோஷம் கொள்ளாமலிருக்கவேண்டுமானாலும் ஆரோக்கியத்திற்குரிய ஆகாரத்தை ஒழுங்காகவும் மிதமாகவும் சாப்பிட்டு வருவதுடன் எல்லா விஷயங்களிலும் சுத்தத்தையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

“லாகிரி பதார்த்தங்களை உபயோகியாமலும், ஆகாரத்தை மிதமாகப் புசித்தும் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்தும், எழுந்ததும் கடற்பஞ்சினால் குளிர்ந்த ஜலத்தைத் தொட்டுத் தேகமெல்லாம் தடவியும் வந்து எனது தேகாரோக்கியத்தைக் காப்பாற்றி யுள்ளேன். இந்தவிதமான பழக்கத்தை நான் 30-வருஷகாலமாக அநுசரித்து வருகிறேன். ஒரு நாள் கூட எனக்கு ஜலதோஷம் பிடித்ததில்லை” என்று ஸர் ஆஸ்ட்லி கூப்பர் என்பவர் சொல்லியிருக்கிறார்.

இராத்திரி தூக்கமில்லாமல் வெகுநேரம் விழித்திருத்தல், கவலையையும் ஆவலையும் உண்டுபண்ணும் காரியங்களில் பிர

வேசித்தல்—இவை தேகசக்தியைக் குறைத்து ரோகத்தையுண்டுபண்ணி மரணத்தைச் சீக்கிரமாக வரவழைக்குமாதலால் அவற்றை யொழிக்கவேண்டும். தேகாப்பியாசம் செய்துவரவேண்டும். மனதிற்கு ரம்மியமான விளையாட்டுகளும் வைத்துக்கொள்ளவேண்டும். மது-நாசித்தூள்-புகையிலை அபின் முதலியவற்றை நீக்கிச் சாதாரணமும் சாமானியமுமான ஆகாரத்தை மிதமாகப் புசித்துவரவேண்டும். கோபம் கொள்ளாமல் மனதை எப்பொழுதும் சாந்தமாக வைத்திருக்க வேண்டும். சோம்பலைக் களையவேண்டும். தேகத்திற்கு வேலைக்கிடமில்லையானால் மனப்பயிற்சியிற் காலத்தைச் செலவிடவேண்டும்.

கிராமங்களில் வசிப்பது நல்லது. எல்லாஜனங்களும் லண்டனைப்போன்ற நகரங்களில் வசிப்பதனால் ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுள் மனிதவர்க்கமே நசித்துவிடுமென்று டாக்டர் ஸ்டாக்டன் கூறுகிறார்.

அமெரிக்கா ஐக்கியநாடுகளில் மனிதனுடைய சராசரி வயது 39. ஆனால் நியூயார்க் பிலடல்பியா நகரங்களில் 23 தான். இந்நகரங்களில் நூற்றுக்கு ஐம்பது 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் மரணம், கெட்ட காற்றும் கெட்ட ஆகாரமுமே அதிக மரணத்துக்குக் காரணம். விஷபேதி முதலான தொத்து வியாதிக்காலங்களில் அது பரவவொட்டாமல் தடுப்பதற்கும் சுத்திகரிப்பதற்கும் 100 பங்குஜலத்தில் இரண்டு பங்கு கர்பாலிக் ஆஸிட்டை விட்டுகலந்து தெளித்தால் போதுமானது.

சந்திரன் குளிர்ந்திருந்தாலும் அதனை விரும்புவதினும் சூரியனையே விரும்பும் உலகம்.

---

# பிள்ளை விளையாட்டு

(53-ம் பக்கத் தொடர்ச்சி)

[மாயக்கூத்தன் எழுதியது]

## (1) சிற்றில் இழைத்தலும் சிற்றில் சிதைத்தலும்

பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டிலே வளர்ந்த சிறுமியர் மணலைக்கொண்டு சிறுவீடுகளை அமைத்து விளையாடினர் என்றும், அவ்வாறு அந்தச் சிறுமியர் இழைத்த சிற்றில்களை அவ்வூர்ச் சிறுவர் காலால் கலைத்துச் சிதைப்பர் என்றும், முன் பகுதியிலே சொன்னேன். ஸ்ரீவில்லிபுத்தூரிலே பெரியாழ்வார் என்று புகழ்பெற்ற விஷ்ணுசித்தர் என்பவரின் மகளாகிய ஆண்டாள் என்னும் விஷ்ணுபக்த சிரோமணி இவ்வழக்கத்தைத் தமது பாட்டுகளிலே குறித்துள்ளார்.

(1) இன்று முற்றும் முதுகுநோவ இருந்து
இழைத்த இச்சிற்றிலை
நன்றும் கண்ணுற நோக்கி நாம்கொளும்
ஆர்வம்தன்னைத் தணிகிடாய்.

(2) முற்றத்து ஊடு புகுந்து நின் முகம் காட்டிப்
புன்முறுவல் செய்து
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்
கடவையோ? கோவிந்தா!

(3) எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று
வீதிவாய் விளையாடும் ஆயர்சிறுமியர்
மழலைச் சொல்லை.

இவைகளினின்றும் நாம் அறிவது என்ன? அக்காலத்துச் சிறுமியர் வட்டமாக உள்ள சிறு தூதைகளையும் சிறு சுளகுகளையும் வண்டல் நுண்மணலையும் கொண்டு வீதியிலேயும் முற்றத்திலேயும் மணலாலே சிறுவீடுகளை அமைத்து விளையாடுவார்கள். அவ்வாறு வீடுகளை அமைத்து 'இது எம் வீடு' என்று கண்ணால் கண்டு மகிழ்வர். இவ்வாறு விசித்திரமாகச் சிறுபெண்கள் மணலாலே கட்டிய வீடுகளை அவ்வூரிலே உள்ள சிறு பாலர்கள் போம்போது காலாலே அழித்து இவர்களை அழவிட்டு விளையாடுவார்.

இவ்வாறு சிறுவீடுகளை மணலினால் சிறுமியர் கட்டி விளையாடும் வழக்கமே, பின்காலத்திலே வீட்டு முன்புறத்திலே மாப்பொடியாலும் கோலக் கல்லின் வெண்பொடியாலும் கோலங்கள் இடுகிற வழக்கமாக மாறியதுபோலும். இவ்வாறு இடப்படும் கோலங்கள் விசித்திரமாக இருக்கின்றன. அவற்றைக் கண்டு, இப்பொழுதும் மேனாட்டவர் நம்மை மெச்சிப் புகழ்கின்றனர். இவ்வாறு சிறுகுழந்தைகளைக் கொண்டு வீட்டிலும் வீட்டுப்புறத்திலும் கோலங்களால் அலங்கரிக்கச் செய்வதால் வெகு அநுகூலங்கள் உண்டு; சிறுமியருக்குச் சித்திரம் எழுதுதல் முதலிய கலைகளிலே அபிருசி உண்டாகும்; வீடு பரிசுத்தமாக வைக்கப்படும்; உள்



ளும் புறமும் அழகுவாய்ந்து விளங்கும்; இவ்விதமான அழகையும் பரிசுத்தத்தையும் காண்பவர்கள் மனது இன்பம் அடையும்.

பெரியாழ்வார் தமது மனதை ஒரு சிறுபெண் என்று பாவித்துக்கொண்டு, அது எப்பொழுதும் விளையாட்டு வேளையிலும் கடவுளையே நினைந்து களிப்புறும் என்பதை அழகாகப் பாடுகிறார். அதாவது:

பொங்கு வெண்மணல் கொண்டு சிற்றிலும்
முற்றத்து இழைக்கலுறில்
சங்குசக்கரம் தண்டுவாள் வில்லும் அல்லது
இழைக்கல் உறாள்.

இவ்வாறு பாடிய பாடலினின்றும் நாம் ஒரு சிறந்த வழக்கத்தை அறிகிறோம். அக்காலத்திலேயே சிற்றில் இழைப்பது, சிறுவீடுகளை மணலால் கட்டுவது என்பதோடு அமையாமல் சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் முதலியபோன்ற கோலங்களை வெண் மணலால் வீட்டு முன்றிலிலே அமைப்பதுவும் வழக்கமாய் இருந்தது. சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் என்னும் இந்த ஐந்து ஆயுதங்களும் ஐம்படை என்னப்படுவன. இவை உலகத்திற்கே காப்புக்கடவுளாகிய விஷ்ணுவையும் பாதுகாத்து அவரைச் சூழ இருக்கின்றன. ஆதலால் இவைகளைச் செம்பிலோ பொன்னிலோ சிறு உருக்களாக 'ஐம்படை' என்று அமைத்துச் சிறு கயிற்றிலே கோத்துச் சிறு குழந்தைகளுக்குக் காப்பணியாக அணிவது பழையகாலத்து வழக்கம். அதனாலே, அவ்

வகை உருக்களைக் கண்டறிந்த சிறுமிகள் வீட்டுக்குக் காப்பாக வேண்டுமென்று அவ்வுருக்களையே வெண் மணல் கொண்டு இழைத்தனர் என்று சொல்வது பொருந்திய வருணனை ஆகும்.

ஆண்மகனுக்கு உரிய பிள்ளைத்தமிழிலே சிற்றிற்ப ருவம் என்பது ஒரு பகுதி; அப்பகுதி, பாட்டுக்குத்தலை வனாகிய சிறுவனைச் சிறுமிகள் "எங்கள் சிற்றில்களைச் சிதையேல்" என்றுபாடுவதாக அமைவது. இவ்வாறு பகழிக்கூத்தர் என்னும் புலவர் திருச்செந்தூர் என்னும் முருகன் கோயிலிலேயுள்ள பாலசுப்பிரமணியனைச் சிறுமிகள் பிரார்த்தித்துப் பாடியதாகப் பாடியுள்ளார். அவர் பாடிய பத்துப் பாடல்களுள் ஒரு பாட்டிலே குமரவேளின் திருத்தாயாரான பார்வதிதேவியார் தமது சிறு வயதிலே எவ்வாறு சிற்றில் இழைத்தார்கள் என்பது குறிக்கப்பட்டு உள்ளது.

*புற்றில் அரவம் தனைப்புனைந்த புனிதருடனே*
*வீற்றிருக்கப்*
*பொலியும் திகிரிவாளகிரிப் பொருப்பை வளர்த்துச்*
*சுவர் ஆக்கி*
*சுற்றில் வளர்ந்த வரைஅனைத்தும் சுவர்க்கால்*
*ஆக்கிச் சுடர்இரவி*
*தோன்றி மறையும் சுருப்பை வெளிதொறும்*
*தோரணக்கால் எனநாட்டி*
*மற்றஇல் உமை எனும்கனக வரையைத்*
*துளைத்து வழிஆக்கி*



*மாகமுகிலை விதானம் என வகுத்து*
*மடவாருடன் கூடிச்*
*சிற்றில் இழைத்த பெருமாட்டி சிறுவா,*
*சிற்றில் சிதையேலே*
*திரைமுத்து எறியும்திருச் செந்தூர்ச் செல்வா*
*சிற்றில் சிதையேலே.*

இந்தப் பாட்டினாலே, உலகத்தைப் படைத்து அளித்து அழிப்பது சக்தியினுடைய விளையாட்டு என்பதை ஆசிரியர் விளக்குகிறார்.

வேறொரு பாட்டானது, 'இவ்வாறு நீ நாங்கள் இழைத்த சிற்றிலைச் சிதைத்தால் உன் பாதத்திலே புழுதிதோயும்; உன்னைப் பரமசிவன் தோளிலே இருத்தும்போது அந்தப்புழுதி அவருடைய தோளிலே தோயும்; உன்னைப் பார்வதியம்மை மடியிலே இருத்தும்போதும் முகத்தோடு அணைத்துக்கொள்ளும்போதும் அவளுடைய ஆடையிலும் முகத்திலும் புழுதிதோயும்' என்று மிகவும் அழகாக வருணிப்பது.

*தையல் மடவார் இழைத்த வண்டல் தன்னை*
*அழிக்கும் அதற்கு அல்ல;*
*தாளமும் உறுத்தி உனது பொன்பூம் தண்டைத்*
*திருத்தாள் தடியாதோ?*
*துய்ய தவளப் பிறைமுடிக்கும் சோதி எடுத்து*
*முகந்து அணைதரத்*

தோளில் இருத்தும் பொழுது மணித்தோளில்
புழுதி தோயாதோ?
வையம் அனைத்தும் ஈன்று எடுத்தும் வயது
முதிரா மடப்பாவை
மடியில் இருத்தி முலையூட்டி வதனத்து அணைக்கில்
உன்கழல் கால்
செய்ய சிறுதாள் செறியாதோ? சிறியோம்
சிற்றில் சிதையேலே
திரைமுத்து எறியும் திருச்செந்தூர்ச் செல்வா
சிற்றில் சிதையேலே.

நமது நாட்டுப் பெரியோர்கள் சிறுபிள்ளைகளின் விளையாட்டுக்களின் மூலமாகப் பெரிய யுக்திகளையும் புத்திகளையும் நாம் எளிதிலே உணருமாறு போதிப்பார்கள். அப்படியே, 'சிற்றில விளையாட்டு' விஷயமாக நமக்கு அவர்கள் போதிக்கும் உண்மைகள் என்ன?

உலகர் அனைவருமே சிறுமியர் போன்றவர்; நாம் எல்லோரும நமக்கு இன்பம் அளிப்பனவான சிற்றில்களை இழைக்கின்றோம். சிற்றிலை ஒரு சிறுவன் காலால் அழிப்பதுபோல் நாம் கட்டி மகிழும் சிற்றில்களைச் சிற்சில வேளைகளிலே ஈசன் அழிக்கிறான். அப்பொழுது, "சிறுவா! எங்கள் சிற்றிலைச் சிதையேல்" என்று அச்சிறுமியர் வேண்டுவது போலவே, நாமும் "இறைவா! எங்கள் சிற்றிலைச் சிதையேல்" என்று வேண்டுகின்றோம். ஏன்? நாமும் அந்தச் சிறுமியர் போல, அவைகளை இன்று முற்றும் முதுகுநோவ



இருந்து இழைத்தோம் அன்றோ? நன்றாக நமது கண்களால் அவற்றின் அழகுகளை நோக்கும ஆர்வம் உடையோம் அன்றோ? ஆதலால் அவ்வாறு வேண்டுகின்றோம்; இது நமது சிறு இன்பங்கள் பயனுறவேண்டுமென்று ஈசனைப் பிரார்த்திப்பதுபோல் ஆகும்.

வேறு சில பக்தர்கள், உண்மைப் பெரியார்கள் அவ்வாறு ஈசன் சிற்றில் சிதைப்பதைக் கண்டு வருந்துவது இல்லை. ஈசன் அவர்கள் இழைத்த கோலங்களை அழித்தான். ஆயினும் அவன்மேல் அவர்களுடைய உள்ளம் ஓடி உருகுகின்றது. அவர்கள் ரோஷப்படுவது இல்லை. இதற்குக் காரணம் என்ன? அவனைக் காணும் பாக்கியம் பெற்றோமே! நமது சிற்றில்களும் அவனது பாதஸ்பரிசம் பெற்றனவே! என்று அவனது கடைக்கண்ணின் அருளைக் கண்டு சிந்தித்து இன்புறுவதேயாகும்.

இவ்வுண்மையை ஆண்டாள் ஒரு பாட்டாலே விளக்கியிருக்கிறாள்.

வெள்ளை நுண்மணற் கொண்டு சிற்றில்
விசித்திரப்பட வீதிவாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்தகோலம் அழித்தி;
ஆகிலும் உன் தன்மேல்
உள்ளம் ஓடி உருகல் அல்லால் உரோடம் ஒன்றும்
இலோம் கண்டாய்
கள்ள மாதவா! கேசவா! உன்முகத்தன
கண்கள் அல்லவே.

பின்னும் ஆண்டாள் "பகுத்தறிவு பெறாத சிறுப்
களை, நீ ஏன் இவ்வாறு வருத்துகின்றாய்" என்று பாடு
கிறாள். அதன் கருத்தாவது: உலகர் எல்லோரும், சிறு
மியர் விளையாட்டிலேபோல, உலகத்திலே சிறுவீடுகள்
புனைந்து தம்மை மறந்திருந்தபோதிலும், அவர்களுக்குப்
பகுத்தறிவும் உயர் ஞானமும் அருளவேண்டி அவ
அவர்களின் சிற்றில்களை அழிக்கின்றாள்; அதாவது
நாம் ஈசனை அறிய விரும்பும் முன்னமேயே அவனு
டைய அருளானது நம்மைநாடி அடைகின்றது. அதை
நாம் அறியாமல் ஈசன் நம்மைத் துன்புறுத்துகின்றான்
என்று தவறாக நினைத்து வருந்துகின்றோம் என்பதே.

---

## மதிப்புரை

சுடாமுனி என்னும் பெயர்கொண்ட தமிழ் நாவலொன்று
நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இந்த நாவல் எழுதிய
வர்:—மேலூர், ஸ்ரீமான் மு. நாகசுப்பராமபிள்ளை யென்பவர்
இவர்கள் இதனை ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள—பிளாக்
வோர்ட் என்னும் சிறந்த நூலைத்தழுவி எழுதியுள்ளார். இது
படிப்பவர்க்குச் சில மொழிபெயர்ப்பு நாவலைப்போல் நடைய
லும் கதாபாகத்திலும் அருவருப்பைத்தருவதா யிராமல் தமி
ழில் நூல் இயற்றவல்லார் ஒருவர் முதல் நூலாக எழுதிய
தென்று கருதத்தக்கபடி, சொற்பொருட்சுவையும் கதைப்
போக்கும் நடையின் இனிமையும், எளிமையும், அழகும்
அமைந்து இலகுவது பாராட்டத்தக்கது. இது விளக்கும்
இனிய கருத்துக்கள் நம் நாட்டுச் சிறுவர் நலம் பெறற்குரிய
வையாயிருப்பதால், நூலாசிரியர் இதனை எழுத எடுத்துக்
கொண்ட சிரமம் புண்யத்தையும் தக்க பயனையும் தருமென்
பதில் ஐயமில்லை. இப்புத்தகம், எம். நாகசுப்பராம பிள்ளை
நிரஞ்சன நிலையம் மேலூர், மதுரை ஜில்லா என்று எழுதி
னால் கிடைக்கும். விலை ரூபா 1.